உ

குருபாதம்


# ஞானசம்பந்தம்

| மலர் 37 | பிங்கள – பங்குனி – 10—4—78 | இதழ் 5 |
|---|---|---|


திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## அறநிலையச் சொத்து – அனாதைச் சொத்தல்ல.

**முதலமைச்சர் எண்ணம் :**

வரவேற்கத்தக்க சில அறிவிப்புக்களையும், வருந்தத்தக்க சில விவாதங்களையும் சிலநாட்களுக்குமுன் தமிழகச் சட்டப் பேரவையில் கேட்க நேர்ந்தது. 1978 – 1979 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அறநிலையத்துறை மானியக்கோரிக்கை விவாதத்தின் இடையே, தகவல் அமைச்சர் மாண்புமிகு R. M. வீரப்பன் அவர்கள் அறிவித்த சில செய்திகள் வரவேற்கத் தக்கன. இந்து சமய அறநிலைய இலாகா பொறுப்பினைத் தமிழக முதல்வர் மாண்புமிகு M. G. இராமச்சந்திரன் அவர்களே தம் நேரடிப் பார்வையில் வைத்துள்ளார். முதலமைச்சர்சார்பாக மாண்புமிகு R.M. வீரப்பன் அவர்கள் அறிவித்த சில தகவல்கள் முதலமைச்சரின் எண்ணமாகவே கருதத்தக்கவை.

**அறநிலையக் கட்டிடங்கள் :**

ஆலய கட்டிடங்களை ஒருகாலத்தில் குறைந்த வாடகைக்குப் பெற்றுக்கொண்ட சில தனிநபர்கள், ஒன்றுக்குப் பத்தாக அதனை உள்வாடகைக்குவிட்டு அதனால் பெரும்லாபம் அடைந்துவந்தனர். அறநிலையங்கள் கட்டிட வாடகையை உயர்த்த முயன்றபோ தெல்லாம் சட்டப் பின்னணியோடு, இத்தகைய நபர்கள் மறுப்புத் தெரிவித்து வாடகையை உயர்த்தாமல் தடுத்து வந்தனர். அறநிலையங்களும், திருக்கோயில்களும் இதுபற்றி எடுத்துரைத்த நியாயவாதங்கள் பல ஆண்டுகளாகச் செவிடன்காதில் ஊதிய சங்காகவே கழிந்தன. இப்போதுள்ள அரசின் சார்பில் பேசிய அமைச்சர் மாண்புமிகு. R. M. வீரப்பன் அவர்கள் அறநிலையங்களுக்குச் சொந்தமான குடியிருப்பு வீடுகளுக்கு 100 சதவிகிதமும், குடியிருப்பல்லாத வீடுகளுக்கு 200 சதவிகிதமும், வர்த்தக நிறுவனங்கள் உள்ள இடங்களுக்கு 300 சதவிகிதமும் வாடகை உயர்த்தப்படும் என்று அறிவித்தார்.

**அமைச்சரே கூறியன :**

அறநிலையச் சொத்துக்களைப் பயன்படுத்துவோர் அறநிலைய வருவாய்களை எவ்வாறு இடைத்தரகர்களாக நின்று தமதாக்கிக் கொள்கின்றனர் என்பதற்கு அமைச்சர் சில உதாரணங்களைக் கூறியுள்ளது அனைவரும் கவனிக்க வேண்டிய செய்தியாகும். அமைச்சர் கூறுகிறார் :—

> " ஒரு வீட்டுக்கு ரூபாய் 24 கொடுக்கும் ஒருவர் அந்த வீட்டின் ஒருபகுதியை ரூபாய் 520 க்கு உள்வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிக்கிறார். ரூபாய் 25 க்கு வாடகைக்கு எடுத்துள்ள ஒருவர் அதை உள்வாடகைக்கு விட்டு ரூ. 2500 லாபம்பெறுகிறார். ரூபாய் 250 வாடகை கொடுக்கும் ஒருவர் ரூபாய் 4000 சம்பாதிக்கிறார். "

அமைச்சரின் அறிவிப்பை உற்று நோக்கினால் ஒரு உண்மை நன்கு புலனாகும். முறையே 22 பங்கும், 100 பங்கும், 16 பங்கும் கோயில்வருவாய் தனிநபர்களால் அனுபவிக்கப்படுவதை உணரலாம். ஆலயங்கள், அறநிலையங்கள் இவைகளுக்கு எதிராகப் பேசுவதையே ஒரு நாகரிகமாகக்கொண்டிருக்கும் சில சட்டசபை உறுப்பினர்கள் அமைச்சரின் அறிவிப்பை நன்கு கவனித்தல் நல்லது. பல்லாயிரம் மக்களுடைய நலன்களுக்காக உள்ள ஆலய வருவாயைச் சில தனி மனிதர்கள் அடைவதை மனப்பூர்வமாக அவர்கள் ஆதரிக்கிறார்களா என்பதைச் சிந்தித்தல்வேண்டும். எந்த ஒரு தனிமனிதனாவது இவ்வாறு தனக்கு உரிய கட்டிடத்திற்கு ரூபாய் 25 வாடகை பெற்றுக்

கொண்டு ரூபாய் 2500 வாடகைதார் பெற்றுக்கொள்ளச் சம்மதிப்பானு என்பதை அனைவரும் நினைவுகூர்தல் நல்லது. ஆலயங்களின் நில வருவாயிலும் இதேபோன்ற இடைத்தரகுகள் நடைபெற்றுவருவதைப் பலரும் அறிவர்.

**அனுதைச் சொத்தல்ல:**

அமைச்சர்மாண்புமிகுவீரப்பன் அவர்கள் இவ்விவாதத்தினிடையே பேசியபோது குறிப்பிட்ட ஒரு தொடர் மிகவும் ஆறுதல் தருகிறது. 'ஆலயச்சொத்துக்களை அனுதைச் சொத்துக்களாகக் கருதவேண்டாம்' என மெம்பர்களை அவர் கேட்டுக்கொண்டதாக அறிகிறோம். அமைச்சரின் இவ்வறிவிப்பு ஆலயச் சொத்துக்களையெல்லாம் ஏழைகளுக்கே விநியோகித்து விடவேண்டும் என்று அரசியல் லாபங்கருதிப் பேசிவரும் சிலருக்கு நல்ல சூடாக அமைந்திருப்பதைக்கண்டு, அறநிலையங்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டிருக்கும் கோடிக்கணக்கான பக்தர்கள் மகிழ்வெய்துகின்றனர். அமைச்சரின் இவ்வறிவிப்பைப் பாராட்டி எழுதிய தினமணி நாளிதழ்,

> "இன்றைய நிலவரத்தில், ஆலயச்சொத்துக்கள் நிர்வாகமும், ஆலயங்கள் தர்மஸ்தாபனங்கள் வருவாய்த்துறைகளை ஒழுங்குபடுத்துவதுமே முக்கியமாக உள்ளது. வருவாய் தக்கபடி அமைந்தால்தான் வழிபாடும் முறைப்படி அமையும் என்பதைச் சொல்லத்தேவையில்லை. இங்கு, தேவாலயங்கள் பிள்ளையில்லாக் குடும்பங்களின் சொத்துப்போன்றது அல்ல என்ற அறநிலைய அமைச்சரின் கருத்தும் கவனிக்கத்தக்கது. ஆலயங்களின் சொத்துக்களிலிருந்து வருவாயைப் பலப்படுத்துவதில் அறநிலையத்துறைஈடுபட்டிருப்பதாக, அமைச்சரின் பதிலுரையிலிருந்து தெரிகிறது. அறக் கட்டளைகள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ, அந்த நோக்கம் ஈடேற்றப்படுவதன் முக்கியத்தை உணர்ந்திருப்பதும் பாராட்டதக்கதாகும். தர்ம சொத்துக்களினின்றும் நடக்கவேண்டிய பணிகளுக்குத் தேவையான வருவாயை உறுதிசெய்யும்நேரத்தில் சமய அறநிலையங்கள் மூடப்படும் நிலைமை ஏற்படாமல் தடுக்கும் அளவுக்கு வருவாயைப் பெருக்குவதும் முக்கியமானதாகும்"

என 1—4—78 தலையங்கத்தில் இதுபற்றிக் குறிப்பிடுவது அரசும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய செய்தியாகும்.

**ஒரு உறுப்பினர் பேச்சு :**

சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் ஆலயங்களின் நிலங்களை உழுபவர்களுக்கே சொந்தமாக்கவேண்டுமென்று இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசியிருக்கிறார். அவர் முன்னாள் முதல்வர் திரு. அண்ணுதுரை அவர்கள் பல ஆண்டுகளுக்குமுன் கூறிய சிலவற்றையும் அவ்வுறுப்பினர் மேற்கோள் காட்டுகின்றார்.

**முதல்வர் அறிக்கை :**

> " குடிவாரமுறை தொடர்பான பல்வேறு சட்டங்களும் கடன் தவணை ஒத்திவைப்புச் சட்டம், பொதுப் பொறுப்புக் கழகங்கள் சட்டம் போன்ற சட்டங்களும் இயற்றப்பட்டதனால் நிலங்கள்மூலம் கிடைக்கும் வருவாயையே முக்கிய வருமானமாகக் கொண்டுள்ள சமய நிறுவனங்களின் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது. நிலங்கள் தான் கோயில் களின் முக்கிய வருமானத்திற்குரிய இடமாகும் "

என முதலமைச்சர் அறிவித்ததை எடுத்துக்காட்டிய அவ்வுறுப்பினர், அறநிலையங்கள், அதன் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றவில்லை எனக் குற்றம் சாட்டி, எனவே நிலங்களை உழுபவனுக்கே உடைமையாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். அவர் முன்னாள் முதல்வர் திரு. அண்ணுதுரை அவர்கள் கூறியதாக ஒரு கருத்தை வெளியிட்டுள்ளதுபற்றி நாம் ஒரு சில கூறவேண்டியுள்ளது.

**ஒரு மேற்கோளும் — மறுப்பும் :**

> " பேரறிஞர் அண்ணு அவர்கள் நிலங்கள் எந்த எண்ணத்தின் அடிப்படையில் கோயில்களுக்கும் மதநிறுவனங்களுக்கும் எழுதிவைக்கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறவில்லை என்பதையும், அவைகள் அந்தக் காரியங்களுக்காக மதத்தலைவர்களால் உண்மையில் பெரிதும் பயன்படுத்தப் படவில்லை என்பதையும் இதே அவையில் பல ஆண்டு களுக்கு முன்னுலே சுட்டிக்காட்டியுள்ளார்கள். "

எனத் தமது உரைக்கு அவ்வுறுப்பினர் வலிமை சேர்க்க முயன்றுள்ளார்.

**மூட்டைப்பூச்சிக்காக வீட்டைக் கொளுத்துவதா ?**

அறநிலையங்கள் மற்றும் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை, உழுபவர்களுக்கே உடைமையாக்கிவிடவேண்டுமென்று

அடிக்கடி பேசிவரும் சில உறுப்பினர்கள் சிலவற்றைச் சிந்திக்க வேண்டும். மக்களின் அறிவு வளர்ச்சிக்காக அமைக்கப்படுவன கல்வி நிலையங்கள். அவைகளுள் ஏதோ ஒன்று சிலகாரணங்களால் சரிவர இயங்காதபோது அக்காரணத்தைத் தெரிந்து குறைபாட்டினைப் போக்கி நல்ல நிலையில் இயங்கச் செய்யவேண்டுவது அரசின் தலையாய கடமை. அவ்வாறன்றிக் கல்வி நிலையங்களே வேண்டாம் என்று சொல்லி அவைகளை அகற்றிவிடுதல் முறையாகுமா? அது போலத்தான் திருக்கோயில்களும் அறநிலையங்களும். ஏதோ இரண்டொன்று சரிவர இயங்கவில்லையானால் இயங்காமைக்குரிய காரணத்தினை ஆராய்ந்து அறிந்து குறைபாடுகள் நீங்கிச் சரிவர இயங்குவதற்குத் துணைபுரியத்தானே அறநிலைய இலாகா அமைந்துள்ளது. அவைகள் எந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்டன என்பதை மனத்துட்கொண்டு அவ்வத்துறையில் பயனளிக்குமாறு அவைகளை இயங்கச்செய்யவேண்டியது அரசின் கடமையாகிறது. அவ்வாறின்றி நாட்டை ஆளும் பொறுப்பு வாய்ந்த சில உறுப்பினர்கள் அவைகளின் உடைமைகளை மக்களின் உடைமைகளாக ஆக்குதல் வேண்டும் என்று கூறுவது எத்தவகையில் பொருத்தமுடையதாகும்?

**எதனால் வந்தது இயலாமை ?**

அறநிலையங்கள் சிலநேரங்களில் உரிய நோக்கங்களை நிறைவேற்ற இயலாதுபோவது உண்மையே. அறநிலையங்களின் உண்மையான வளர்ச்சியில் நாட்டமுடைய அரசு இருக்குமானால், அதன் துணையோடு அறநிலையங்களும் தடையின்றித் தம் கடமைகளை ஆற்ற முடிகிறது. அரசின் துணை இல்லாதநிலை ஏற்படுமானாலும், அரசுக்கு அறநிலைய வளர்ச்சியில் மனப்பூர்வமான நாட்டமில்லாதுபோனாலும் அறநிலையங்களில் வளர்ச்சித் தடைபடுவதோடு அறநிலையங்களும் அவற்றின் உண்மையான நோக்கங்களை ஈடேற்றமுடியாத நிலைமைக்கு ஆளாகின்றன. இந்தநிலையில் அறநிலைய நிர்வாகத்தின்மீது குறை கூறுவது பொருந்தாது.

**மக்கள்முன் வைக்கிறோம் :**

பல ஆண்டுகளாக முள்மேல் நடப்பதுபோல் அறநிலையங்கள் பல்வேறு சோதனைகளை எதிர்நோக்கிநின்றன. அரசினை அணுகிப் பலவாறு அவற்றின் உதவியை நாடின. அரசோ, மற்றும் கட்சியினரோ இவ்வகையில் அறநிலையங்களின் உண்மை வளர்ச்சியில் நாட்டங்காட்ட முன்வரவில்லை. வேறுவழியின்றி வெளிப்படையாக நமது நிலைமையை, நாம் இப்போது மக்கள்முன் வைக்கவேண்டிய நிலை வந்துள்ளது. மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர்கள் பக்தியில்

நாட்டம் உடையவர்கள். பக்தியால் விளைந்த பண்பாட்டால் அற நிலையங்களைக் குறைகூறும் மிகச் சிறுபான்மையினர்மீது அவர்கள் பொறுமைகாட்டிவருகின்றனர். அடக்கமும், பண்பாடும் மிக்க பக்தர்களின் நெஞ்சத்தை அளவுக்குமீறிப் புண்படுத்துவது நல்லதல்ல. எனவே, ஆலயங்கள் மற்றும் அறநிலையங்களுக்கும் பக்க பலமாக நிற்கவேண்டியவர்கள் அவ்வாறு நிற்காத போது, யாருக்காக இந் நிலையங்கள் இயங்கிவருகின்றனவோ அவர்களுக்கு முன்னரே இப் பிரச்சனையைத் தெளிவுபடுத்தவேண்டியது நமது கடமையாகிறது.

**பொருத்தமற்றவாதம் :**

பகுத்தறிவின் பெயரால் சுயமரியாதை இயக்கத்திற்குப் பெருநிதி சேர்க்கப்பட்டுள்ளது. நோக்கம் எதுவானாலும் அதற்கென்று ஈட்டப் பட்டதை அவ்வகையில்தானே செலவிடவேண்டும்? இதனை மாற்ற முயற்சிப்பவர் ஒருவரும் இல்லையே. காந்திஜியின் பெயரால், மற்றமற்ற தலைவர்கள் நிறுவனங்கள் இவற்றின்பேரால் அமைக்கப்பெற்ற நிதிகள் அதன் நோக்கங்களுக்காகமட்டுமே செலவிடப்படும்போது பக்தி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்காக விடப்பட்ட அறநிலையங்களின் நிலங்களை உழுபவர்களே தம் உடைமையாக்கிக்கொள்ளவேண்டும் என்பது பொருத்தமற்ற வாதமேயாகும்.

**சூளையல்ல தமிழ்ப்பண்ணை :**

'சைவம் என்னும் சூளையிலே தமிழ் நட்டால் முளையாது' என மேற்கோள் ஒன்றை அவ்வுறுப்பினர் காட்டித் திருமடங்களின் தமிழ்ப்பணிகளைக் கேலிசெய்கிறார். கடந்த நானூருண்டு வரலாற்றை நடுநிலையாக நின்று அவர்கள்உற்றுநோக்குவார்களானல், தமிழ்மொழி இலக்கியம், இலக்கணம், உரைகள், பிரபந்தங்கள் போன்ற துறைகளில் திருமடங்களின்அளவிலாதபெரும் பங்கினை அவர்களும் உணர இயலும். எனவே, அரசின் நல்லெண்ணம்வளர்ந்து செயலாகமலரவும் உறுப்பினர்கள் உண்மை உணர்வோடு நடுநிலைநின்று எதனையும் விவாதிக்க அவர்களுக்கு மனத்திடம் அருளவும் இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம். பக்திமிக்க தமிழ் மக்கள் தங்கள் உடைமைகளான திருக்கோயில் திருமடங்களின் வளர்ச்சியிலே உண்மையான நாட்டம்காட்டத் தவறமாட்டார்கள்.

வாழிய பக்தர்கள் !

வளர்க நல் அறநிலையங்கள் !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# * ஆசியுரை

## ஜீவகாருண்யம்

"எவ்வுயிருந் தம்உயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ!"

அறங்கள் பலவற்றுள்ளும் ஜீவகாருண்யமே தலையாய அறமாகச் சொல்லப்படுகின்றது. "ஒன்ருக நல்லது கொல்லாமை" என இவ்வறத்தினை முதலாவது அறமாகத் திருவள்ளுவர் கூறுகின்ருர். அருளுடைமைக்கு அடிப்படையாக விளங்கும் இந்த ஜீவகாருண் யத்தை மக்களிடையே பரப்புவதற்கு முதல் வழிகாட்டியாகத் தாயுமானவர் விளங்கினர்.

"கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே"

என்னும் பாடலில் ஜீவகாருண்யத்தை உலகெங்கும் பரப்புவதில் தாயுமானவ அடிகட்கு இருந்த ஆர்வத்தை நாம் நன்கறியலாம்.

"கொல்லாவிரதம் ஒன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

என்னும் பாடலில் ஜீவகாருண்யம் உடையவர்களது உயர்வை அவர் விளக்குவதோடு ஜீவகாருண்யம் இல்லாதவர்களது தாழ்வையும் நயம்படக் காட்டியுள்ளார் தாயுமானவர்.

---

* அகில இந்திய வானொலியில் திருச்சி நிலையத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 8—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது. வானொலி நிலையத்தாரின் அனுமதி யுடன் வெளியிடப்பெற்றது

எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணிப்பரிவுகாட்டும் உள்ளம் தனக்கு வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறார் அடிகள்.

" எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே "

என்றும், அது இயலாவிடின்,

" எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்பதென்நாளோ "

என்றும் தாயுமானவ அடிகள் அருளிய பாடல்கள் ஜீவகாருண்யத்தை அவர் முக்கியமாகக் கருதினர் என்பதைத் தெரிவிக்கின்றன.

உலகில் பலரும் கூறும் ஜீவகாருண்யத்திற்கும் தாயுமானவர் கூறும் ஜீவகாருண்யத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. தாயுமானவர் கூறும் ஜீவகாருண்யம் சமய நெறிகளோடு தொடர்புடையது. அதாவது எல்லா உயிர்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான் ஆதலின் எந்த உயிர்க்குத் தீங்கு செய்தாலும் அது இறைவனுக்குச்செய்த குற்றமாகவே முடியும் என்றும், எந்த உயிர்க்கு நன்மை செய்தாலும் அது இறைவனுக்குச் செய்த நன்மையாகும் என்றும் கூறும் சமயந்தழுவிய உயிர் இரக்கமே தாயுமானவர் கூறுவதாகும்.

" எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவன் என்று
எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு "

என்பது சைவ சமய நெறிக்குறள். சமய உணர்வோடு கலந்து போதிக்கப்பெறும் ஜீவகாருண்யமே மக்களிடத்தில் நிலைபெற்று விளங்கும்.

உலக வாழ்க்கையில் மனித சமுதாயத்தோடு ஒட்டி வாழும் உயிரினங்கள் பசு, எருது, ஆடு, கோழி, காக்கை முதலிய உயிரினங்களாகும். இவற்றையும் இவற்றோடு ஏனைய உயிர்களையும் காப்பது நம் கடமையாகும். எல்லா உயிர்களிடத்தும் நமக்கு இரக்க உணர்வு உண்டாகவேண்டுமென்று அன்றாட வாழ்வில் பல சமய நியதிகளை நம் முன்னோர்கள் நமக்கு வகுத்துத் தந்துள்ளார்கள். பசுவைத் தெய்வமாக மதிக்கவேண்டுமென்றும், அதற்குப் புல்முதலிய உணவு கொடுக்கவேண்டுமென்றும் நம் சமயங்கூறும் நல்லறத்தில் ஜீவ காருண்யம் அடிப்படையாய் விளங்குவதைக் காணலாம்.

விடியற்காலையில் பெண்கள் வீட்டிற்குச் சாணம் தெளித்துக் கோலம் இடுகின்றார்கள். தமிழ்நாட்டுப் பெண்களின் கலைத்திறனுக்கு

எடுத்துக்காட்டாய்த் திகழும் மாக்கோலம், வீட்டுக்கு அழகு தருவதோடு எளிய உயிர்களாகிய எறும்பு முதலியவற்றுக்கு உணவுதரும் நல்லறத்தையும் உள்ளடக்கியுள்ளது. எறும்பு கண்ணில்லாத உயிர். கண்ணற்ற அவ்வுயிருக்கு உணவுதந்தால் கண்ணொளி உண்டாகும் என்ற பொருளில் எறும்பு தின்றால் கண்தெரியும் என்ற பழமொழியும் வழங்கக் காண்கிறோம். நமக்குப் பயன்படாத நொய்யரிசி, குறுணை முதலியவற்றை எறும்புப்புற்றில் கொட்டும்பழக்கம் இன்றும் நம்மிடம் உள்ளது. நாள்தோறும் நாம் உண்பதற்கு முன் காக்கையை அழைத்து உணவுதந்து உண்ணும் பழக்கம், ஜீவகாருண்யத்தை அடிப்படையாகக்கொண்டது. இன்னோரன்ன பழக்கங்கள் எவ்வுயிர்களையும் தம் உயிர்போல் எண்ணும் மனநிலையை நமக்கு வளர்க்கப் பெரியோர்கள் வகுத்த சமய மரபுகளாகும். முல்லைக்குத் தேரளித்த பாரியின் செயலும் மயிலுக்குப் போர்வையளித்த பேகனின் செயலும் தாவரங்களிடத்தும் பறவைகளிடத்தும் அம்மன்னர்கள் காட்டிய அருளுள்ளத்தை நமக்குப் புலப்படுத்துகின்றன.

சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களைப் பயிரிடுவதைச் சிறந்த அறமெனக் கூறினர் பெரியோர். மக்கள் பலரும் செல்லும் சாலை ஓரங்களில் ஆல், அரசு, மா முதலிய மரங்களையே பெரும்பாலும் பயிரிடுவர். படர்ந்து விரிந்து வளரும் இம் மரங்கள் மக்களுக்கு நல்ல நிழல்தருவதோடு உடலுக்கும் நன்மை தரும். அணில் பறவை முதலிய உயிர்கட்கும் உணவு தரும்.

நம் முன்னோர்கள் எதையும் சிந்தித்து மக்கட் சமுதாயத்துக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் நன்மை தரும் செயல்களை நல்லறங்களோடு இணைத்து வழங்கும் முறைகளை நாம் உணரவேண்டும்.

" எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

என்று கூறிய தாயுமானுரின் மனநிலை எவ்வளவு உயர்ந்தது என்பதை நாம் எண்ணி உணரவேண்டும். இன்று நாம் கூறும் சோஷலிச அரசியல் நெறிகளின் கருவாக இத்தொடரை நாம் கருதலாம். மனித சமுதாயத்தில் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்; பஞ்சம், பசி, பிணி முதலியவற்றால் மக்கள் துன்புறாமல் வாழவேண்டும்; போட்டி பொறாமை தன்னலம் இவற்றால் மற்றவர்களைக் கெடுத்து அல்லது அழித்து வாழும்மனநிலை மக்களிடம் அறவே அகலவேண்டும் என்பன போன்ற கருத்துக்களுக்கு இருப்பிடமாக உள்ள இப்பாடல் தாயுமானவர் மனித சமுதாயத்துக்கு வழங்கிய நிலையான அறிவுரையாகும்.

உ

# புத்தாண்டே வருக!

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,

கங்காளன் திருவருளும் உயிர்கள் வாழக்
 கருதுகின்ற குருவருளும் துணையாய் நிற்கப்
பிங்களபோய் புத்தாண்டு '*காள யுக்தி*'
 பீடுடனே வருகிறது! வரவேற் கின்றோம்!
மங்களங்கள் பெருகட்டும்! உலகம் எல்லாம்
 மழைபெய்து ஓங்கட்டும்! ஞானம் கல்வி
பொங்குகடல் போல்ஓங்கி மக்கள் வாழ்வு
 புகழ்பூத்துத் துலங்கட்டும்! இறைமை காக்க!

போர்மேகம் விலகட்டும் உலகம் எல்லாம்
 பூரித்து நட்பாலே ஒன்று கட்டும்!
ஆர்ப்பாட்டம் நீங்கட்டும்; கடமை விஞ்சி
 அமைதிவழி புத்துலகம் அடிவைக் கட்டும்!
வேர்போன்ற இல்லறத்தின் மகளிர் வாழ்வில்
 விளங்கட்டும் பண்பாடு! நலஞ்சே ரட்டும்;
சீர்பூத்த இறையருளால் மக்கள் வாழ்வில்
 செல்வங்கள் குவியட்டும்! வாழ்க! வாழ்க!

புத்தமுதத் தமிழோடு, சமயம் காக்கும்
 புகழ்*ஞான சம்பந்தம்* அன்பர்க் கெல்லாம்
எத்திசையும் புகழ்ஓங்க இனிமை சேர
 இறையருளை வந்தித்துப் புதிய ஆண்டில்
தித்திக்க வாழ்த்துரைத்து இன்பஞ் சேர
 தெள்ளுதமிழ் கவிபாடி போற்றி செய்யும்
இத்தரையை வாழ்விப்பாய்! காள யுக்தி
 இனிதேவா! வரவேற்று! வணங்கு கின்றோம்!

# திருநெடுங்களத் தலச் சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர்** எம்.ஏ.

உலக வாழ்க்கையில் நமக்குவரும் இடர்கள் பலவற்றையும் நீக்கி நமக்கு இன்பநலம் செய்பவனுகை இறைவன் திருநெடுங்களத்தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ருர். ஸ்ரீ திருஞானசம்பந்தர் இத்தலத்தின் இறைவர்மீது பாடியருளிய திருப்பதிகம் 'இடர்களையும் திருப்பதிகம்' எனப் பெயர்பெற்றுத் திகழ்கிறது. இதனை அன்போடு ஓதுவார் பலரும் துன்பங்கள் பலவற்றிலிருந்தும் விடுபட்டு நலம் பல பெற்று வருகின்றனர்.

**திருநெடுங்களம் :**

இது சோழவளநாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது. தஞ்சை திருச்சி பேருந்துச் சாலையில் துவாக்குடி என்னும் ஊரில் இறங்கி 3 கிலோமீட்டர் வடக்கே சென்ருல் இத்தலத்தை அடையலாம். திருச்சிராப்பள்ளியிலிருந்து இவ்வூருக்கு நேரேசெல்லும் பேருந்துகளும் உள்ளன. புகைவண்டிப் பாதையில் திருஎறும்பியூர் நிலையத்திலிருந்து கிழக்கே 10 கிலோ மீட்டர் தூரத்திலும், சோழகம்பட்டி நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திலும் இத்தலம் உள்ளது.

**கோயில் அமைப்பு :**

திருநெடுங்களம் சமவெளியிலமைந்த பெரிய ஊர் எனப் பொருள் தரும் சொற்ருெடராகும். நெடுங்களமாநகர் எனத் தேவாரத்தில் குறிக்கப்படுதலைக் காணலாம். இன்று இவ்வூர் மிகச் சிறிய கிராமமாகக் காணப்படுகிறது. திருநட்டான்குளம் எனப் பேச்சு வழக்கில் வழங்கப்படுகிறது. கோயில் இரண்டு பிராகாரங்களுடன் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு முன்னுல் திருக்குளம் உள்ளது. கோயிலின் முன்வாயிலில் கோபுரம் இல்லை. இரண்டாவது நுழைவு வாயிலில் அழகிய கோபுரம் திகழ்கிறது. திருக்கோயில் பழுதுற்ற நிலையில் காணப்படுகிறது. திருப்பணி முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. வெளிப் பிராகாரத்தில் அம்பிகை கோயிலும் உள்ளது. வடகிழக்குமூலையில் கல்யாண மண்டபமும் திருநந்தவனமும் உள்ளன. துவஜஸ்தம்பம் நந்தி பலிபீடங்கள் உள்ளன, உட்பிராகாரத்தின் தென்கிழக்கில் சோமாஸ்கந்தர் சந்திரசேகரர் சந்நிதிகள் உள்ளன

தென்பிராகாரத்தில் சப்தகன்னியர், ஜேஷ்டாதேவி, ஐயனர் இவர்கள் காட்சியளிக்கின்றனர். தென்மேற்குமூலையில் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட வலம்புரி விநாயகர் சந்நிதி உள்ளது. மேற்குப் பிராகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் முருகன் சந்நிதி உள்ளது. இதற்கு அருகில் உபயநாச்சியார்களுடன் ஸ்ரீ வரதராசப்பெருமாள் விளங்குகின்றார். வடக்குப் பிராகாரத்தில் அகத்தீசுவரர் சந்நிதியும் அதன்நேரே அகத்திய தீர்த்தமும் உள்ளது. கிணறு வடிவமாக உள்ள இத்தீர்த்தத்தில் எடுக்க எடுக்கக் குறையாது ஒரேமட்டத்தில் தண்ணீர் பெருகித் தேங்கிநிற்பது வியப்பிற்குரியது. இப்பிராகாரத்தில் துர்க்கை, சண்டீசர், நவக்கிரகங்கள், நடராஜர் சந்நிதிகள் உள்ளன. சமயாசாரியர்களில் மூவர் திருவுருவங்களும், சூரியன், பைரவர் சந்நிதிகளும் கிழக்குப் பிராகாரத்தில் உள்ளன.

வலம்வந்து மகாமண்டபத்தைக்கடந்து திருக்கோயிலுக்குள்ளே சென்றால் அர்த்தமண்டபத்தை அடையலாம். இத்தலத்திருப்பதிகம் இங்கு சலவைக்கல்லில் வெட்டிவைக்கப்பெற்றுள்ளது. அர்த்த மண்டபத்தைக்கடந்து சுவாமி சந்நிதியை அடையலாம். இடர்களையும் இறைவனாக நெடுங்களநாதர் விளங்குகிறார்.

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

என்று திருஞானசம்பந்தர் தேவாரத்தை ஓதி வழிபட்டு வெளிப்பிராகாரத்தை அடைந்து அம்பாள் திருக்கோயிலுக்குள் செல்லலாம். அம்பாள் அருள்மிகு ஒப்பிலாநாயகியின் சந்நிதி தெற்குநோக்கி விளங்குகின்றது.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமளயாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே.

என்ற அபிராமி அந்தாதிப் பாடலை ஓதி வழிபடலாம்.

**மூர்த்திகளின் பெயர் :**

இத்தலத்து இறைவர் அருள்மிகு நெடுங்களநாதர் எனவும். அருள்மிகு நித்தியசுந்தரேசுவரர் எனவும் வழங்கப்பெறுகின்றார், அம்பாள் திருப்பெயர் அருள்மிகு ஒப்பிலாநாயகி என்பதாகும். தலமரம் — வில்வம். தீர்த்தம் — சுந்தரதீர்த்தம். அத்தீர்த்தக்கரையில்

கருப்பண்ணசாமிகோயில் உள்ளது. நோயுற்றோர் இவருக்குப் பானக நைவேத்தியம் செய்து பலருக்கும் வழங்கினல் நோய் நீங்குவர் என்று கூறப்படுகிறது.

**தலப்பெருமை :**

உலகத்தாயாக விளங்கும் அன்னைபராசக்தி சிவபரம் பொருளை நோக்கி இத்தலத்தில் தவம் செய்தாள். பெருமான் கள்ள உருவத்தில் தோன்றித் தேவியின் கைத்தலம் பற்றினர். அன்னை அச்சமுற்று, தாழைகள் நிறைந்த சோலையில் புகுந்து ஒளிந்தனள். இறைவனும் பின்தொடர்ந்து அம்பிகையை ஆட்கொண்டு அவளையும் உடன் அழைத்துக்கொண்டு திருக்கயிலை சென்றார் என்பது இத்தலத்தின் சிறப்பு வரலாறுகும். அன்னை ஒளிந்த இடம் ஒளிமதிச்சோலை என்ற பெயரோடு திகழ்கிறது. இங்கு இலிங்கம் சூலம் முதலியன காணப் படுகின்றன. மேலும் இத்தலத்தில் அகத்தியர் வழிபட்டு அருள் பெற்றுள்ளார். வங்கிய சோழமன்னனுக்கு இத்தலத்திறைவன் தன் பேரழகைக்காட்டி அருள்புரிந்துள்ளார்.

**தலப்பதிகம் :**

இத்தலத்து இறைவன்மேல் திருஞானசம்பந்தர் பாடியருளிய ஒருதிருப்பதிகம் மட்டும் உள்ளது இப்பதிகம் ' இடர்களையாய் நெடுங் களம் மேயவனே ' என்ற மகுடமுடையதாகத்திகழ்கிறது. இப்பதிகம் இறைவனை விளித்து, உம்மை நினைந்து வழிபடும் அடியார்களின் இடர்களைக் களைவாய் என்று வேண்டுவதாக அமைந்துள்ளது. அப்பர் பெருமான் இத்தலத்திறைவரைப் பாடியருளிய பதிகம் கிடைக்கவில்லை. வேறு தலங்களைப்பற்றிப் பாடியருளிய பதிகங்களில் இத்தலத்தைக் குறித்துள்ளார். புள்ளிருக்குவேளூர்த் திருத்தாண்ட கப் பதிகத்தில்,

ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு
அடியோடு முடியயன்மால் அறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் றன்னை
நேமிவான் படையால்நீள் உரவோன் ஆகம்
கீண்டானைக் கேதாரம் மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவாள் அரவோடு என்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

என்று அப்பர் இத்திருத்தலத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

( தொடரும் )

திருவாமூரில்

# ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

சைவ - சமயாசாரியருள் இரண்டாமவராகிய அருள்மிகு. திரு நாவுக்கரசு நாயனாரின் குருபூஜைப் பெருவிழா, அவர்கள் அவதாரத் தலமாகிய திருவாமூரில் 30—4—78, 1, 2—5—78 ஞாயிறு திங்கள் செவ்வாய் ஆகிய மூன்று நாட்களிலும் விசேஷ அபிஷேக ஆராதனை களுடன் மிகச் சிறப்பாக நடைபெறும்.

விழா நாட்களில் தருமை, குன்றக்குடி ஆதீனம் **ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானங்களும்**, திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும் எழுந்தருளுவார்கள்.**

உயர் நீதிமன்ற நீதிபதி **திரு. S. நடராஜன்,** இந்துசமய அறநிலைய - ஆட்சித்துறை ஆணையர் **திரு. M. K. பாலசுப்பிர மணியம்** ஆகியோர் வருகை புரிகின்றனர். விழாவின் அங்கமாக **"அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு"** நடைபெறவுள்ளது. இதில் **கருத்தரங்கம், கவியரங்கம், பட்டி மண்டபம், வழக்காடுமன்றம், பண்ணாராய்ச்சி மாநாடு, திருமுறை இசையரங்கு, இன்னிசை விரிவுரை** முதலியன இடம்பெறுகின்றன. தமிழகத்தின் தலைசிறந்த **தமிழறிஞர்களும், ஓதுவாமூர்த்திகளும்** விழாவில் பங்கேற்கின்றனர். 25—4—78 செவ்வாய்க்கிழமை அன்று சிதம்பரத்திலிருந்து **தில்லைத் திருமுறைக் கழகத்தினரும், சிவபூஜகர்களும்** பாதயாத்திரையாகப் புறப்பட்டு திருவாமூர் செல்கின்றனர். மேலே குறிக்கப்பெற்ற மூன்று நாட்களிலும் சிவபூஜைசெய்து பன்னிரு திருமுறைப் பாராயணம்செய் வர். 2—5—78 செவ்வாய்க்கிழமை குருபூஜைத் திருநாள்; அன்று ஸ்ரீ அப்பர் பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனைகளும் திருவீதி யுலாவும் நடைபெறும். தருமையாதீனம் **ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்** தரிசனத்திற்கு எழுந்தருளுவார்கள். அன்பர்களும், பக்தர் களும் அணி அணியாகத் திரண்டு திருவாமூர்வந்து கண்டும்கேட்டும் உய்திபெற வேண்டி வருக வருக என அழைக்கிறோம்.

---

(1) பொருள் உதவி புரிவோர்: **திரு. G. வாகீசம் பிள்ளை செயலர், திருவாமூர் அருள்மிகு. அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக்குழு, கனகசபை நகர், சிதம்பரம், தெ. ஆ.** மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பி இரசீது பெற்றுக்கொள்ளவும்.

(2) 28—4—78 க்குப் பின் பணம் பண்டம் அனுப்புவோர் செயலர், ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக்குழு, திருவாமூர் பண்ணுருட்டி (வழி) என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(3) ஸ்ரீ பசுபதீசுவரர், ஸ்ரீ அப்பர் சுவாமிகள் வழிபாட்டிற்கு அபிஷேகத் திரவியங்கள் கொடுக்கலாம். சமாராதனைக்குரிய பொருள் களையும் அப்பர் ஆலய அலுவலகத்தில் சேர்ப்பித்து இரசீது பெறலாம். அபிஷேகத்திற்குரிய உயர்ந்த கேஞேஜ் பன்னீர் அலுவலகத்திலேயே விலைக்குக் கிடைக்கும்.

உ
சிவமயம்

# ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரத் திருநாளை முன்னிட்டு, நிகழும் காளயுக்தி ஆண்டு சித்திரைத்திங்கள் 31-ஆம் நாள் (14—5—78) ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிஅளவில் திருநெடுங்களம் ஸ்ரீஒப்பிலாநாயகி உடனுகிய ஸ்ரீ நித்தியசுந்தரர் திருக்கோயிலிலும், மாலையில் திருவெறும்பியூர் ஸ்ரீ நறுங்குழல்நாயகி உடனுகிய ஸ்ரீ எறும்பீசர் திருக்கோயிலிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும். தலத் திருப்பதிகங்கள் ஓதப்பெறும்.

நிகழ்ச்சியிற் காணுமாறு சமயச் சொற்பொழிவுகளும் நிகழும்.

## சொற்பொழிவுகள்

நாள்:— 14—5—78 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணி
இடம்: — ஸ்ரீ நித்தியசுந்தரர் ஆலயம், திருநெடுங்களம்.

தலைவர்:— **திரு. S. மகாலிங்கம் B. Sc., அவர்கள்**
நிர்வாக அதிகாரி, ஸ்ரீ தாயுமான சுவாமி திருக்கோயில்.

சொற்பொழிவு :—
**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்** எம். ஏ.
தருமபுரம்.
" இடர்களையும் திருப்பதிகம் "

நாள்:— 14—5—78 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 - மணி
இடம்:— எறும்பீசர் ஆலயம், திருவெறும்பூர்.
தலைவர்:—
**திரு. ப. மூக்கப்பிள்ளை அவர்கள்**
தலைவர், அருள்நெறித் திருக்கூட்டம், திருச்சிராப்பள்ளி.

சொற்பொழிவுகள்:—
தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,
**வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர்** எம். ஏ.
தருமபுரம்.
" ஞானசம்பந்தர் "

**திரு. மு. வைத்தியநாதன்,**
திருச்சிராப்பள்ளி.
" அப்பர் "

**இல்ஞ்சி. திரு. அ. இ. மூத்துக்குமாரசாமி**
திருச்சிராப்பள்ளி.
" சுந்தரர் "

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக.

உ
குருபாதம்

தருமையாதீனத்தில்

# கோடைக்கால சமயப்பயிற்சி வகுப்பும்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும்

18 — 5 — 78 முதல் 28 — 5 — 78 வரை

---

தருமையாதீன ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவையொட்டி 18—5—78 வியாழக்கிழமை முதல் 28—5—78 ஞாயிற்றுக்கிழமை முடிய கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பும், திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் தருமபுரத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

சமயப் பயிற்சி வகுப்பு நாடோறும் காலை 10-30 மணி முதல் 12 - 30 மணி வரையிலும், மாலை 2 - 30 மணி முதல் 4 - 30 மணி வரையிலும் நிகழும். திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் பட்டிமண்டபம், கருத்தரங்கம், சிந்தனைமேடை, வழக்காடு மன்றம், கவியரங்கம் முதலிய பல நிகழ்ச்சிகள் நடைபெறும். அவற்றில் அறிஞர்கள் பலர் பங்குகொள்கின்றனர்.

சமயப் பயிற்சி வகுப்பில் வேத சிவாகமங்கள், ஆலய வழிபாட்டு முறைகள், பத்ததிகள், கிரியைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், புராணம், இதிகாசம் முதலிய பல்வேறு நூல்களைப்பற்றி அவ்வத்துறையில் சிறப்புமிக்க அறிஞர்களால் வகுப்பு முறையில் போதிக்கப்பெறும். பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வோர்க்கு உணவும் உறையுளும் இலவசம்.


கலந்துகொள்ள விரும்புவோர், விண்ணப்பக் கட்டணமாக ரூபாய் ஐந்து மேலாளர் தருமையாதீனம் மாயூரம். 609001 என்ற முகவரிக்குப் பணவிடைசெய்து இரசீதுடன் தங்கள் பெயர், வயது, தகுதி, பணிநிலை முதலியனபற்றித் தெளிவாக எழுதி 10—5—78 க்குள் விண்ணப்பித்துக்கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப் பெறுவோர்க்கு அனுமதிக்கடிதம் அனுப்பப்படும். அனுமதிக்கடிதம் பெற்றோர் தங்கள் சொந்தப்பொறுப்பில் வந்து கலந்துகொள்ளலாம்.

மாயூரத்திலுள்ள தருமபுரம் ஸ்ரீ ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி

## பத்தாண்டு நிறைவு விழா

( 19—2—1978 )





1. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம் தமிழக ஆளுநர் மேதகு. பிரபுதாஸ்பட்வாரி அவர்கள் அருளாசி பெறுதல்.

2. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பத்தாண்டு விழாவில் அருளாசி வழங்கல்.

மாயூரத்திலுள்ள தருமபுரம் ஸ்ரீ ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி

## பத்தாண்டு நிறைவு விழா

( 19—2—1978 )



1. தமிழக ஆளுநர் மேதகு. பிரபுதாஸ்பட்வாரி அவர்கள் விழாச் சிறப்புரை ஆற்றுதல்.
2. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பத்தாண்டு விழா மலரை வெளியிட்டு ஆளுநர் அவர்களிடம் வழங்குதல்.

# மெய்கண்ட நூல்கள்

## ( ஆராய்ச்சி முன்னுரை )

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்.

திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ,

( மலர் 37, இதழ் 4, பக்கம் 196 இன் தொடர்ச்சி )

### iii கொடிக்கவி:

இது ஐந்து பாடல்களையுடையது. வெண்பா யாப்பில் இயன்றது. கூத்தப் பெருமான் திருவிழாக் கொடியேற்றத்தின் பொழுது கொடியேறாமல் தடைப்பட்டது கண்டு தில்லைவாழ் அந்தணர் வருந்தினர். அப்பொழுது, 'இங்கு உமாபதி வந்தால் கொடியேறும்' என்ற வானொலி எழுந்தது. தில்லைவாழ் அந்தணர்கள் அவ்வண்ணமே அவரிடம் சென்று வேண்ட அவரும் இக்கொடிக்கவி பாடி அதனை ஏற்றினர் என்பது இந்நூல் பற்றிய வரலாறாகும்.

ஒளியாகிய சிவமும் இருளாகிய மலமும் இருக்குமிடம் ஒன்றே. அது உயிரேயாகும். இவ்விரண்டில் ஒன்று மேலிடில் ஒன்றுஒளிக்கும். எனினும் ஒளியாகிய இறைவன், மலமாகிய இருள், உயிரைத் தாக்கா வண்ணம் உயிர்க்குயிராய் நின்று அருள் புரிவன். ஆயினும் உயிர் வேம்பு தின்ற புழுப்போல முன் நோக்கிய உலகியல் இன்பங்களையே பின்னும் ஒராற்றான் நோக்கும். இவ்வாறு அவ்வுயிர் நோக்காது இறைவனையே நோக்கி இன்புறுமாறு இக்கொடியைக் கட்டினேன். குருமூர்த்தியே! மெய்ப்பொருளாகிய நீ யார்? உன் அருள் சக்தி என்பது யாது? கண்ணெனத் தக்க உயிர் என்பது யாது? இருள் என்பது யாது? ஒளி என்பது யாது? நின்னால் காக்கப்பெறும் இவ்வுலகனைத்தும் உன்னை உணருமாறு இக் கோபுரவாசலில் கொடி கட்டினேன். மாற்றமனங்கழிய நின்ற மறையோனாகிய இறைவனைப் பிரியாதவாறு ஒன்றுபட்டு நிற்க இக் கொடியேற்றம் அருள வல்லது. திருவைந்தெழுத்தின் பேதங்களாகக் கூறப்பெறும் வெழுத்துக்கள் பலவும் நெஞ்சின் கண் அழுந்தி உணரப்பெறின் திருவருள் உயிரைச் சிவத்தொடு சேர்க்கும். இதனையே இக் கொடியேற்றம் அறிவுறுத்தும். இறையருளால் உயிர் வினையின் நீங்கி விளங்கிய 'அறிவினைப் பெற்று அவ்வறிவாலேயே மாறாமல் நிற்கும்; அதுவே சிவப்பேறாகும். இதனையே இக் கொடியேற்றம் கூறாமல் கூறுகிறது.

### iv போற்றிப் பஃறொடை:

இது 95 கண்ணிகளையுடையது. பஃறொடை வெண்பா யாப்பில் அமைந்தது. தம் குருமூர்த்தியாய மறைஞானசம்பந்தர் தம்மை ஆட்கொண்ட அருட்செயலைப் பலவாருகப் போற்றி மகிழுமுகமாக அமைந்துள்ளது.

இறைவனே குருமூர்த்தியாக வந்து ஆட்கொண்டான் என்பதை முதல் 6 கண்ணிகளில் போற்றுகின்ருர் ஆசிரியர். உயிரின் வினை நீக்கத்திற்கே உடலும் உலகும் கொடுக்கப்பெற்றன என்பதை 7 முதல் 13 வரையுள்ள கண்ணிகளில் குறிப்பிடுகின்ருர். மாயை குருடனுக்குக் கொடுக்கப் பெற்ற கோல்போன்றதென்பது. இங்குக் குறிக்கத் தகுந்ததொரு உவமையாகும். வினை வயத்தால் தாய் வயிற்றில் கருவாக வாழ்கின்ற பொழுதும், அது உருப்பெற்று வெளி வருகின்ற பொழுதும், இறைவன் செய்யும் கருணையை 14 முதல் 18 வரையுள்ள கண்ணிகளில் விளக்குகின்ருர். குழந்தையாக உருப் பெற்று வெளிவந்தபின் குழந்தையினிடத்துப் பசியை ஏற்படுத்தி அழச்செய்தும், அப்பசி நீங்குவதற்குத் தாயினிடத்துத் தீம்பாலைத் தந்தருளியும் இறைவன் செய்யும் கருணை இருந்தவற்றை 19 முதல் 22 வரையுள்ள கண்ணிகளில் வியந்து போற்றுகின்ருர். இருவினைவயத்தால் உயிர்க்கு இன்பத் துன்பங்கள் மருவுமாறுசெய்யும் அறத்தை 23 முதல் 35 வரையுள்ள கண்ணிகளில் போற்றுகின்ருர். உயிர்கள் முன்செய்தனவும், செய்துகொண்டு வருகின்றனவும், அவற்ருல் மேலும் வருவனவுமாய வினைப்பயன்களுக்கு ஏற்ப நன்மை தீமைகளைக் குறித்து வரும் திறத்தை 36 முதல் 38 வரையுள்ள கண்ணிகளில் குறிப்பிடுகின்ருர். உயிர் தான்செய்த நல்வினையின் பயனுக இந்திரன் முதலிய இறைவர் பதங்களை நுகர்வதும், தீவினையின் பயனுக எரிவாய் நரகில் வீழ்வதும், உயிர்களை உய்யக் கொள்ளும் அறக்கருணை மறக்கருணை ஆகியவற்றையும் 39 முதல் 53 வரையுள்ள கண்ணிகளில் குறிப்பிடுகின்ருர். இவ்வாறெல்லாம் உயிர்களைப் பக்குவப்படுத்தி அவற்றை மேலும் மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராவண்ணம் தம் அருட்பதிவைச் செய்யும் பெருங்கருணையை 54 முதல் 58 வரையிலுள்ள கண்ணிகளிலும், விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் ஆகிய மூவர்க்கும் அருள்புரியும் திறத்தை 59 முதல் 83 வரையுள்ள கண்ணிகளிலும் இவ்வாறெல்லாம் உயிர்களை ஆட்கொண்டருளும் குருநாதன் தம்மையும் ஆட்கொண்டு, அயல்நெறியில் போகவிடாது அரிய சைவ சமய நெறியில் நிறுத்திய பெருங்கருணையை 84 முதல் 95 வரையுள்ள கண்ணிகளிலும் போற்றுகின்ருர். நூலின் இறுதியில் உள்ள வெண்பாவில் தில்லையையும் தம் குருநாதன் திரு வடிகளையும், அப்பெருமானுல் பெற்ற சிவபோகத்தையும் போற்றி மகிழ்கின்ருர்.

**உண்மை நெறி விளக்கம்:-**

இது ஆறு பாடல்களையுடையது. விருத்தப்பாவால் இயன்றது. மிகச்சிறிய நூலாயினும் இதன்கண் பத்துப் பொருள்கள் விளக்கப் பெற்றுள்ளன.

1. **தத்துவரூபம்:** நிலமுதல் சிவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் நிலையை அறிவது. 2. தத்துவதரிசனம்: மேற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களும் அறிவற்றன என அறிவது. 3. தத்துவ சுத்தி: உயிர் இவற்றின் வேறாகத் தன்னைக்காண்பது. 4. ஆன்ம ரூபம்: ஆணவம் நீங்கப் பெற்ற நிலையில் இறையருளால் மெய் யுணர்வைத் தன்னறிவின் காண்பது. 5. ஆன்மசுத்தி: உயிர் திருவருளில் அடங்கித் தான் என வேறின்றி ஒன்றியிருப்பது. 6. ஆன்மதரிசனம்: உயிர் தற்செயலற்று நிற்பது. 7. சிவரூபம்: யாண்டும் நீக்கமற நிற்கின்ற பரம்பொருள். அருளையே தனது வடி வாகக் கொண்டு உயிர்களின் ஆணவம் நீங்குதற்கு உலகைத்தோற்று விப்பதும்ஒடுக்குவதுமாகியசெயல்களைச்செய்கின்றது.இவையனைத்தும் தன்பொருட்டன்று; உயிரின் பொருட்டேயாம். இவ்வாறு செய் பவனும் சிவபெருமானேயாம் என உயிர் தன் அறிவில் காண்பது. 8. சிவதரிசனம்: யான் எனதென்னும் செருக்கறத் திருவருள் உயிரின்கண் பொருந்துதலே திருவடியாகும், பார்க்குமிடமெலாம் சிவமாகத் தோன்றலே முகமாகும், சொல்லிறந்து நின்ற பேரின்பமே திருமுடியாகும் எனத்தெளிந்து இவ்வாறு தோன்றும் பொருளை இடையறாது நுகர்ந்து கொண்டிருப்பதன் வாயிலாக உலகியல் உணர்வுகள் தீர சிவஞானத்தைப் பெறுவதாகும். 9. சிவயோகம்: வையத்துள் வாழுங்கால் எதிர்ப்படும் பொருள் யாதாயினும் அதன் உண்மை அறிந்து, அதனைப்பற்றும் உயிரின் இயல்பையும் கண்டு அவ்வுயிர்க்கு மேலாய அருளையும் அதற்கு மேலாய சிவத்தையும் உணர்ந்து, அவ்வொன்றினையே பற்றி, உலகில் காணும் குற்றம், குணம், உணர்வு, நுகர்வு முதலிய எல்லாவற்றிற்கும் அதுவே மூல மாதல் கண்டு அவனன்றி ஓரணும் அசையாது என்னும் உணர்ச்சி யால் அப்பரம் பொருளோடு ஒன்றுவது. 10. சிவபோகம்: சிவபரம் பொருளோடு ஒன்றிய பெரியவர்கள் ஊழ்வினை வயத்தால் கொலை, களவு, கள்ளுண்டல் முதலிய பாதகங்களைச் செய்திடினும் நெறியல்லா நெறிச் செல்லினும், தவறுகளேசெயினும் அவற்றால் அவர் தாக்குறார். காரணம், அவர் தமக்கென ஒரு செயலின்றி இறையுணர்வின் வய மாகிநின்று செய்கின்றார் ஆதலின் இறைவனும் அவ்வுயிரோடு ஒன்றி உண்ணல், உறங்கல், நடத்தல் முதலிய செயல்களைச் செய்து தன்னுடன் அவர் வேறற நிற்குமாறு செய்துவிடுவன். இந்நுகர்ச்சியை உயிர்பெறுவதாகும். இந்நூலின் இறுதியில் உள்ள வெண்பாவால் இந்நூலைச்செய்தவர் தத்துவநாதர் என்பாரும் உண்டு.

# பருப்புக்கீரை - (அ) - கோழிக்கீரை

திரு. மு. விட்டல் எம்.எஸ்ஸி., (வேளாண்மை)

இக்கீரையில் அதிகமாகத் தாதுப்பொருள்களோடு உயிர்சத்து 'ஏ' யும் அதிகமாக அடங்கியுள்ளது.

**100 கிராம் பருப்பு கீரையில் அடங்கியுள்ள சத்துக்கள்:**

| | | |
|---|---|---|
| ஈரம் | ... | 90 - 5 கிராம் |
| புரதம் | ... | 1 - 9 ,, |
| கொழுப்பு | ... | 0 - 6 ,, |
| தாதுப்பொருள்கள் | ... | 2 - 3 ,, |
| நார்ச் சத்து | ... | 1 - 3 ,, |
| இதர மாவுப்பொருள் | ... | 2 - 9 ,, |
| சோடியம் | ... | 67 - 2 மி. கி. |
| பொட்டாசியம் | ... | 716 மி. கி. |
| உயிர்சத்து 'ஏ' | ... | 3820 (Iu) அனைத்துலக அளவீடு |
| சுண்ணாம்பு | ... | 111 மி. கி. |
| மெக்னீசியம் | ... | 120 ,, |
| ஆக்ஸாலிக் அமிலம் | ... | 1679 ,, |
| பாஸ்பரஸ் | ... | 45 ,, |
| இரும்பு | ... | 14.8 ,, |

**மருந்துக் குணம் :**

இதைப் பருப்புடன் உண்ண அதிக சுவையாக இருக்கும். உண்போர்க்குக் கண்களை ஒளியுடையதாக்கும். அதிக குளிர்ச்சியைத் தரும். ஆகவே கப உடலோர்க்கு உதவாது.

**சாகுபடி முறை :**

நிலத்தை நான்கைந்து முறை உழுது புழுதியாக்கவேண்டும். இரண்டு (அ) மூன்றும் முறை உழுகையிலே எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம் (அ) கம்போஸ்ட் இட்டுஉழுதல்வேண்டும். பிறகு கடைசியாக உழுவதற்குமுன் எக்டருக்கு 125 கிலோ அமோனியம் சல்பேட் 300 கிலோ சூப்பர் பாஸ் பேட் 60 கிலோ. மூரியேட் ஆப் பொட்டாஷ் இட்டு உழுது நிலத்தை 4' அகலமுள்ள பாத்திகளாக பிரித்தல் வேண்டும். நீளம் நிலத்திற்கேற்பவும், நீர் பாயும் தன்மைக் கேற்பவும், பாத்தியின் நீளம் மாறுபடுமாயினும், 6 அடி நீளம் சாலச் சிறந்ததாகும். ( 6' × 4' ).

மேற்கண்டபடி நிலம் தயாரித்து பாத்தி பிரித்து விதை விதைக்க வேண்டும். வீட்டில் சிறு பாத்திகளில் பயிரிட கடைசியில் வேருடன் வாங்கிய பருப்புக்கீரையின் கட்டையை (வேர்ப்பாகத்தை)ப் பாத்தியில் நட்டு பயிரிடலாம்.

**விதை யளவு :**

எக்டருக்கு 8 கிலோ விதை தேவைப்படும்.

**பின் நேர்த்தியும் நீர்பாய்ச்சலும் :**

களைகள் வளர ஒட்டாமல் களை எடுத்தல் வேண்டும். விதைத்ததும் ஒருமுறை நீர்பாய்ச்சி, பிறகு மூன்றும்நாள் உயிர் நீர் இறைத்தல் வேண்டும். நிலத்திற்கேற்ப ஒருவாரத்திற்கு ஒரு முறையோ 5 நாட்களுக்கு ஒருமுறையோ நீர் பாய்ச்ச வேண்டும்..

நகர்ப் புறத்தே உள்ள கீரைத் தோட்டங்கட்குப் பொதுவாக நகரக் கழிவு நீரே பாய்ச்சப்படுவதால் அவர்கள் உரமிடுவதே இல்லை.

**அறுவடை :**

பூமியில் இருந்து 3 முதல் 5 செ. மீ. உயரம் விட்டு கிள்ளி எடுக்கலாம். அல்லது வேருடன் பிடுங்கி கத்தையாக விற்கலாம்.

பொதுவாக விதைத்த 25 நாள் முதல் 30 நாளுக்குள் முதல் அறுவடைக்குத் தயாராகிறது.

**மகசூல் :**

எக்டருக்கு சுமார் 50,000 கத்தைகள் வரை கிடைக்கும். கத்தை ஒன்று 5 பைசாவிற்கு விலை போகும்.

# "குரங்கும் குரங்காட்டியும்"

"சித்தாந்தப் புலவர்மணி"

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

**முன்னுரை :**

மனம் என்பது ஒரு வியக்கத்தக்க கருவி. அதிலும், மனித மனம் மிகவும் வியத்தற்குரியது. மனிதன் என்ற சொல்லே, மனம் என்னும் சொல்லின் அடிப்படையாகத் தோன்றியதேயாகும். மனத்தின் இயல்பை நினைத்து உணர உணர, நாம் பெரிதும் வியப்பில் ஆழ்கின்றோம். மனம் எனபது, அணுபரிமானம் உடையது என்று, நியாய நூலார் கூறுவர். ஆனால், அதன்கண் மாறிமாறிக் கணந்தோறும் தோன்றும் எண்ண அலைகளைக் கருதினால், மனம் ஒருவகையிற் கடலினும் பெரியது எனத் துணிந்து சொல்லலாம். 'மனம்போல வாழ்வு' என்பது பழமொழி. மனம் நம்மைத் தேவனுக்கியும் உயர்த்தும்; விலங்காக்கியும் வீழ்த்தும். நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும், மாற்றிக்காட்டும் இயல்பு மனத்திற்கு உண்டு. நிரயத்தைத் துறக்கமாகவும், துறக்கத்தை நிரயமாகவும் மாற்றும் வல்லமை, மனத்திற்கு உள்ளது. மனத்தின் இயல்பிற்கு ஏற்பவே, மனிதர்கள் உயர்வு அல்லது தாழ்வு எய்துகின்றனர். மனம் நம்மை நல்லவர்களாக்கி வாழவும் வைக்கின்றது; தீயவர்களாக்கிக் கெடுத்து வருந்தி உழலவும் செய்கின்றது.

**உருவகம் :**

மனத்தின் இயல்புகள் பலவற்றையும் ஆய்ந்து உணர்ந்த அறிஞர்களும், கவிஞர்களும், அருளாளர்களும், அதனைப் பலவகைகளில் உருவகம் செய்து, ஏற்ற பெற்றி புகழ்ந்தும் இகழ்ந்தும் உரைத்துள்ளனர். 'மனம் எனும் **நெடுந்தேர்**', 'மனம் எனும் **பறவை**', 'மனம் எனும் **மாயப்புரவி**', 'மனம் எனும் **தோணி**' என்றெல்லாம், பல வகைகளில் கவிஞர்கள் மனத்தின் இயல்பைக் கவின்மிக உருவகம் செய்து காட்டியுள்ளனர். '**கல்மனம்**', '**இரும்புமனம்**', 'மனம் எனும் காடு', 'மனக் குகை', 'மனக்கோயில்', 'மனமலர்' என்றும், இலக்கியங்களில் மனத்தைப் பற்றிய குறிப்புக்கள், ஆங்காங்கே அழகுறவருகின்றன.

## குரங்கு :

இங்ஙனம் மனத்தின் இயல்பினை, அறிஞர்கள் வெவ்வேறு வகைகளில் உருவகஞ்செய்து உணர்த்தியுள்ளனராயினும், அவை எல்லாவற்றையும்விட, ஓர் உருவகம் மிகச் சிறப்பாகவும், பொருத்தமாகவும் அமைந்து காணப்படுகின்றது. அதுதான் மனத்தைக் 'குரங்கு' என்று குறிப்பிடும் சிறந்த உருவகம் ஆகும். மனத்தின் இயல்புகளை உள்ளவாறு விளக்குதற்கு இதனினும் சிறந்த பொருத்தமான உருவகம் பிறிதொன்றில்லை எனத் துணிந்து சொல்லலாம். குரங்கின் குறும்புகளும், மனித மனத்தின் பலவகை அலைவுகளும் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன.

" **மனமெனுமோர் பேய்க்குரங்கே !** மடப்பயலே ! நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து மருட்டாதே கண்டாய் !
இனமுறவென் சொல்வழியே யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடுநீ ! யென்சொல்வழி யேற்றிலையா னாலோ
தினையளவுன் அதிகாரஞ் செல்லவொட்டேன் ! உலகம்
சிரிக்கவுனை அடக்கிடுவேன் ! திருவருளாற் கணித்தே
நனவினெனை யறியாயோ ? யாரெனஇங் கிருந்தாய் ?
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே !"

என அருட்டிரு இராமலிங்க அடிகளார், இவ்வுண்மை தெளிந்து அழகுற அருளிச்செய்துள்ள சிறந்த திருவருட்பாப் பாடல், இங்கு நாம் இனிது சிந்தித்து மகிழ்தற்குரியது.

## பொருத்தம் :

மனத்தைக் குரங்காகக் குறிப்பிட்டு, இராமலிங்க அடிகளார் இயம்பியிருப்பதன் நுட்பம், இனிதுணர்ந்து போற்றத்தக்கது. குரங்கு ஒரு சிறிது நேரமும் வாளா இராமல், பலவகைக் குறும்புகள் செய்து கொண்டே இருக்கும்; எங்கும் தாவித்தாவி ஏறி ஓடும். அதுபோல மனமும் பலவகைகளில் அலைந்து திரியும்; தகாத தீய பல எண்ணங்களை மாறிமாறி எண்ணிக்கொண்டுகிடக்கும். குரங்குகள் காடுகளில் திரியும், மலைகளில் ஏறும், மரக்கிளைகளில் தாவும். தன் விருப்பம் போல் எங்கும் சுற்றித்திரியும். அதற்கு ஏற்ப மனமும், உலகியல் வேட்கை ஆகிய காடுகளில் அலையும்; மகளிரின் தனங்களாகிய மலைகளில் உலவ விரும்பும்; ஐம்புல ஆசைகளாகிய கிளைகளில் மாறி மாறித் தாவி, கீழும் மேலும் சுழன்று கரணமிடும்; நன்று தீது என்று பாராமல், எங்கும் சென்று எதையும்பற்றிக்கொண்டு, திரிந்து அலைந்து உழலும். இத்தகைய பல பொருத்தங்கள் இருப்பதனாலேயே, சான்றோர்களும் ஞானிகளும் மனத்தைக் குரங்கு என்று தகவறிந்து கூறியுள்ளனர்.

**குரங்காட்டி :**

குரங்கு இத்தகைய தனதுகுணங்களால் மிகவும் இழிந்ததுபோலக் காணப்படினும், தக்க ஒரு குரங்காட்டியின் தொடர்பு பெற்ருல், நல்ல பயிற்சியும் பண்பும் பெற்றுச் சிறப்பு எய்துதலைக் காண்கின்றோம். அங்ஙனமே, நம்முடைய மனமாகிய குரங்குக்கும், ஒரு சிறந்த குரங் காட்டியின் தொடர்பும் பயிற்சியளிப்பும் ஏற்படுமாயின், மிக்க நலம் பயக்கும். குரங்கின் குறும்புகளையும் அலைவுகளையும் தடுத்துத்திருத்தி நல்ல கலைப்பயிற்சியை அளித்துப் பழக்கி, அதனை நலமுற வாழ்விக்க வல்லவன் ஒரு குரங்காட்டியே ஆவான். அம்முறையில், நம் மனத் தையும் திருத்திப் பண்படுத்திச் சிறப்பு எய்துவிக்கவல்ல சிறந்த குரங்காட்டி ஒருவன் 'உளன்! நாம் அவன்பால் நம் மனக்குரங்கை ஒப்படைத்தால், அவன் அதன் செயலை நன்ருகத் திருத்திப் பணி கொள்வான். அக்குரங்காட்டி எவனுதல் கூடும் என்று சொல்லவும் வேண்டுமோ ?

நம் மனமாகிய குரங்கை நாம் ஒப்படைத்தால், அதனை தனி உவந்து ஏற்று நன்கினிது பழக்கி, நலமெலாம் அடைவிக்கவல்ல குரங் காட்டி ஆண்டவனே ஆவான். குரங்காட்டியை அடைந்தாலன்றிக் குரங்கு திருந்தி உய்யுமாறில்லை; அதுபோல, ஆண்டவன்பால் அடைக்கலம் புகுந்து, அவன் வயப்பட்டுநின்று அன்புசெய்து ஒழுக லுற்பட்டாலன்றி, நம் மனக் குரங்கு திருந்திச் சிறப்புற்று நலம் பெற்று உய்தற்குரிய வழி, பிறிது எதுவும் இல்லை; மக்கள் திருந்திப் பண்பட்டு மனத்துக்கண் மாசிலராய், அறவாழ்வு வாழ்வதற்கு, இறைவனிடத்து ஈடுபாடும், இறைவழிபாடும் மிகப் பெரிதும் இன்றியமையாதனவாகும். மனத்தைத்திருத்தி ஆட்கொண்டு, துணைபுரிந்து, காத்தருளிக் கடைத் தேற்ற வல்லவன், **மனத்துணைநாதன்** ஆகிய சிவபெருமானேயாவன்.

**சிவானந்தலகரி :**

இவ்வுண்மையினைச் " சிவானந்த லகரி " என்னும் சிறந்த துதி நூலில், ஆதி சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள், அழகிய ஒரு சுலோ கத்தின் (20) வாயிலாகத் தெளிவுறுத்திச் செவ்விதின் விளக்கியருளி யுள்ளார்கள் :- " சிவபெருமானே ! என்னுடைய மனம், ஒரு குரங்கை ஒத்துள்ளது. குரங்கின் குணங்களெல்லாம் என் மனத்திற்கும் உள்ளன. குரங்குபோலவே என்னுடைய மனமும், இடையருது எப்பொழுதும் உலகியல் மயக்கம் ( சித்தவிகாரக்கலக்கம் ) ஆகிய காட்டில், அலைந்து திரிந்துகொண்டிருக்கின்றது : இளம்பெண்களின் தனங்களாகிய மலைக் குவடுகளில் ஒடி ஆடி நடனஞ்செய்துகொண் டுள்ளது ; பலவகைப்பட்ட ஐம்புல ஆசைகள் ஆகிய கிளைகளில் விரைந்து விரைந்து மாறிமாறித் தாவிக் கீழும்மேலுமாகச் சுழன்று

உழலுகின்றது; தன் விருப்பம்போலக் கட்டுப்பாடு என்பது சிறிதும் இல்லாமல், எங்கெங்கோ சுற்றித் திரிந்துகெட்டு அலைகின்றது. இடை யறாது அலையும் இயல்புடைய என்னுடைய மனம், கேட்டை விளை விக்கும் சேட்டைமிக்க குரங்குபோல உள்ளது. அக்குரங்கால் யான் அடையும் தொல்லைகளுக்கு ஓர் எல்லையேயில்லை. ஆதலின் என் மனமாகிய குரங்கை, நின்பால் யான் ஒப்படைக்கின்றேன். அதனைத் தாங்கள் பக்தி என்னும் கயிற்றினால் கெட்டியாகக்கட்டித் தங்கள்பால் வைத்துக்கொள்ளுங்கள்.

ஏனெனில், தாங்களே அனைவருக்கும் இன்பமும், மங்களமும் செய்யும் இயல்புடையவர். ஆதலின் இக்குரங்கையும் திருத்தி நலஞ் செய்தல் தங்களால்தான் இயலும். மேலும், தாங்கள் எல்லா இடங் களிலும் பரவி நிறைந்து விளங்கும் பண்புடையவர். அதனால், தங்களுக்கு என்னுடைய மனக்குரங்கு, எந்த இடத்தில் அலைந்து திரிந்து சுற்றிக்கொண்டிருந்தாலும், அதனைத்தேடி அலைந்து அடக்கி யாள்வது மிகவும் எளிது.

அங்ஙனம் செய்தல், குரங்குக்குமட்டுமேயன்றி, குரங்கின் சொந் தக்காரனாகிய எனக்கும் பெருநலம் பயப்பதாகும். இதனால் தங்க ளுக்கும் மிகப் பெரிய நலமும் உதவியும் உண்டு. எங்ஙனமெனில், தாங்களோ கையிற் கபாலத்தைவைத்துக்கொண்டு அடியார்களின் அன்பு ஆகிய பிச்சையைத் தேடிப்பெறுகின்ற தொழில் உடையவ ராகத் திகழ்கின்றீர்! பிச்சை எடுப்பவர்கள், வாளா தாம்மட்டுமே செல்லாமல் ஒருகுரங்கையும் கயிற்றில் கட்டி உடனழைத்துக்கொண்டு பிச்சை எடுக்கச் செல்லுதல் இயல்பாக உள்ளது. அஃது அவர் களுக்குப் பெரிதும் உதவியாக இருத்தலையும் காண்கின்றோம்.

ஆகவே, கையிற் கபாலம் ஏந்திக்கொண்டு இருத்தலால் **கபாலி** எனவும், பிச்சை எடுத்தலால் **பிச்சாடனர்** (பிச்சைத்தேவர்) எனவும் விளங்குகின்ற தாங்கள், என்னுடைய மனமாகிய குரங்கை யான் தங்களுக்குத் தருகின்றேன். அதனைத் தாங்கள் பக்தி என்னும் கயிற்றினால் கட்டி, அழகுற ஆடுமாறு பழக்கி, பிச்சை எடுக்கும் தங்க ளின் தொழிலுக்கு உதவியாகத் தங்கள்பால் இனிது வைத்துக் கொள்ளுங்கள் என்பது அந்தச் சிறந்த வடமொழி சுலோகத்தின் பொருள்!

## பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை :

" சிவானந்த லகரி " என்னும் துதிநூலில் வரும் அந்தச் சிறந்த சுலோகத்தின் பொருளைப் பின்வரும் அழகிய பாடல் தன்கண் அமையக் கொண்டுள்ளது.

"மோகமாம் அடவி திரிந்து, அரிவையர்தம்
முலைக்குவட் டிடை நடம் ஆடித்,
தாகமார் ஆசைத் தருக்குலம் தோறும்
தாவும்என் புன்மனக் குரங்கைப்
பாகமார் பக்தி நான்கொடு கட்டிப்
பலிக்குநீ செல்க; யான் கொடுத்தேன்
ஏகநா யகனே; தில்லையில் ஆடும்
இறைவனே; எம்பெரு மானே."

என்பன, அந்தச் சிவானந்தலகரிச் சுலோகத்தின் சிறந்த செந்தமிழ் மொழிபெயர்ப்புச் செய்யுளாகும்.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் எனத் திகழ்ந்திருந்த பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், தமது முதுமைப் பருவத்தில் நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையிற் கிடந்தபொழுது தம்மைக்காணவந்த அன்பர் ஒருவர் தமது பேச்சுக்கு இடையே கூறிய சிவானந்த லகரிச் சுலோகத்தினை வியந்து சுவைத்து, உடனே தமது மாணவர் ஒருவரை ஏடும் எழுத்தாணியும் கொணரச் செய்து, எழுதிக்கொள்ளுமாறு பணித்து மொழிபெயர்த்துப் பாடியளித்தது, இந்த இனிய அரிய செய்யுள். உடலின் அகத்ததோ புறத்ததோ என ஐயுறத் தக்க நிலையில், உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த பொழுதும், மகாவித்துவான் பிள்ளை அவர்களின் உள்ளத்தில் இருந்து விரைந்து எழுந்து, உருவெடுத்து உதித்த சிறந்த அழகிய செய்யுள் இது!

## முடிவுரை :

இதன் சொற்பொருட் சுவைநலங்களில் ஈடுபட்டு இன்புறுவதுடன் நாம் நம் மனமாகிய குரங்கை, கபாலம் ஏந்திப் பிட்சாடன வடிவங்கொண்டு, இரவலர் கோலத்தில் திகழுகின்ற **மனத்துணைநாதர்** என்னும் சிவபெருமானாகிய குரங்காட்டியின்பால் ஒப்படைத்து, அன்பு செலுத்தி, நலம் பலவும் பெற முயலுவோமாக.

"தனித்துணை நீநிற்க, யான் தருக் கித்தலை யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய
**மனத்துணை யேஎன்றன் வாழ்முத லேஎனக் கெய்ப்பில்வைப்பே!**
தினைத்துணை யேனும் பொறேன்; துயர் ஆக்கையின் திண்வலையே."

— மணிவாசகர்.

# சிவபோகசாரம்

**வி. சா. கு.**

( மலர் 37 இதழ் 4 பக்கம் 186 - தொடர்ச்சி )

**ஓர் விருத்தப்பாதி : ( 23 - 30 )**

சிவபோகசாரம் சிவஞான சித்தியாரில் ஓர் விருத்தப்பாதி எனக்குறிப்பிடும் பாட்டு அந்நூலின்கண் எட்டாம் சூத்திரத்திலுள்ள " அறியாமை அறிவகற்றி " என்னும் செய்யுளின் முதற்பாதி என்பர். அச்செய்யுள்:

" அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினல் அறியாதே அறிந்து
குறியாதே குறித்துஅந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயில்
பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாம் தானய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
நின்றென்றும் தோன்றிடுவன் நிராதார ஞயே "

இப்பாடலின் முற்பாதி கேட்டல், சிந்தித்தல், தெளிதல்களால் நிற்கும் நிலையைத் தெரிவிக்கிறது.

**நில், கொல் :**

எமது ஞானகுரவர் மனம் முதலிய கருவிகளால் அறிந்தணுக முடியாத சிவத்தை அடைதற்கு இரவு பகல் எனக் கூறப்படும் மல மாயா காரியங்களாகிய கேவல சகலங்கள் நீங்கிய நிலையில் ஒரு பொழுதும் நீங்காது நிலையாக நில் என்றும், அவ்வாறு நிற்கும் போது மலமாயா கன்மங்களின் தொடர்பு தோன்றுமாயின் எமது அருளுரை களைப் பற்றுக்கோடாகக் கொண்டு கொல் என்றும் கூறினர்.

**நான் யார் ?**

தூயதான உண்மைப் பொருள்களைப் போதிப்பவரே! செந்தாமரை மலர் போலும் திருவடிகளை உடையவரே! இந்த தனுகரண புவன போகங்களாகிய நான்கும் ஆணவமலம் காரணமாக வந்த மாயாகாரியங்களாயின் நான் யார்? என்னை இன்னபொருள் என்று சொல்லியருளுவீராக.

**மூன்றும் உணர்ந்தவர் முத்தர் :**

அறிவேஉயிர் அவ்வறிவில் தோன்றும் இன்ப உணர்வே சிவம். என்பதுண்மை நிலையை அறியவொட்டாது என்னறிவை மறைத்து நின்றதே பாசம், எனக்கூறியருளினர் அருட்குரவர். பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்பை ஆராய்ந்துணர்ந்தவரே பாச நீக்கத்தைப் பெறுவர்.

**முப்பொருள்களினியல்பு :**

நீ (உயிர்) எவ்விடத்தும் நிறைந்து நின்று அறிதற்குரிய வியாபக சித்து. நாம் (பதி) நீ அறியுமிடத்தெல்லாம் உன்அறிவுக்கறிவா யிருந்து அறியச்செய்யும் அதிவியாபகசித்து. ஆணவம் உயிரை அணுத்தன்மை செய்வது. மாயை ஆணவமறைப்பைச் சிறிது நீக்கி அறிவை உடம்பளவிற்றாக விலக்கி உடம்பை நீயேயாகக்காட்டி மயக்குவது, கன்மம் நன்மை தீமைகளை உயிர்களுக்கு அளிப்பது.

**கிளியேகேள் :**

நம் குருநாதர் எழுந்தருளியுள்ள கமலை எனப்படும் திருவாரூரை எண்ணும் கிளியே ! (மணவனே) கேள். நம் அருட்குரவரது திரு வடிகள், மும்மலங்களின் இயல்பையும் அவற்றோடு கூடியஉயிர்களின் இயல்பையும், அவ்வுயிர்க்குயிராகிய சிவத்தினது உண்மையையும் எனக்கு ஐயமறத் தெளிவித்தன.

**பாசநீக்கம் சிவப்பேறு :**

ஒளிமயமான திருவாரூரின்கண் எழுந்தருளியுள்ள செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை உடையவரும் தமிழ்மொழியால் சிவஞானம் அருள்பவரும் ஆகிய ஞானப்பிரகாசர் என்னும் அருட்குரவர், முதலில் என்னுடைய பாசங்களை அறுத்துப் பின்னர் யான் அப்பாசங்களில் திரும்பாதவாறு திருவருளால் தெளிவு உண்டாக்கிச் சிவத்தோடு என்னைக் கூட்டியருளினன்.

**நான் இங்கே ; நீ அங்கே :**

யான் (உயிர்) மாயா காரியங்களிடத்துள்ளேன் நீர் (கடவுள்) மாயையைக் கடந்த இடத்துள்ளீர். இவ்வாறிருத்தலால் யான் என்னையும் உம்மையும் எவ்வாறுணர்வது ? எனின் உயிர் ஆகாயம் போல் எவ்விடத்தும் நிறைந்து நிற்கும் அறிவு மயமானது. கடவுள் உயிருக்குவேறன்றி அவ்வறிவில் நன்கு விளங்கும் இன்பமாகவுள்ளது. மாயாகாரியங்களினால் உயிர் இந்நிலையை மறந்துள்ளது என்பதைத் தெளிந்துநிற்றலே முறை.

( தொடரும் )

# உருத்திராக்ஷத்தின் தோற்றமும் அதன் பெருமையும்

பிரவசனரத்நம், வியாகரணசிரோமணி, இந்திவிசாரத்.
திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

முன்னொருகாலத்தில் பகவான் ஸதாசிவர் தன்மனத்தை உறுதிப் படுத்திக்கொண்டு கைலாய மலையின்மேல் ஆயிரம் ஆண்டுக்காலம் கடும் தவம்செய்துகொண்டிருந்தார். தவம் தொடங்கிச் சிறிது காலம் முடிந்ததும் தியானத்தில் ஈடுபட்டிருந்த சதாசிவருடைய மனத்தில் ஒருவித அச்சம் ஏற்பட்டது. இவ்விதம் திடீரென ஏற்பட்ட அச்சம் நீங்க அவர் தனது இருகண்களையும் திறந்தார். கண்களில் வெளியில் உள்ள ஒளி புகுந்தமாத்திரத்தில் அவைகளிலிருந்து கண்ணீர் பெருகத் தொடங்கிற்று. பெருகிய கண்களிலிருந்து சில சொட்டுக்கள் (துளிகள்) இந்தப் பூமியில் விழுந்தன. அந்தக் கண்ணீர் சொட்டுக்களால் கன்னட தேசத்திலிருந்து மதுரா, அயோத்யா, காசி, லங்கை, மலையமலை, ஹரித்வார், ஸஹ்யமலை (குடகு) முதலிய சில இடங்களில் உருத்திராக்ஷ மரங்கள் தோன்றின. அவருடைய கண்களிலிருந்து தோன்றிய இந்த மரங்களுக்கு இந்த பூமண்டலத்தில் ஒப்பற்ற பெருமை ஏற்பட்டது. வேதங்களிலும் சாத்திரங்களிலும் வாய்விட்டு உருத்ராக்ஷங்களின் பெருமை பாடப் பட்டிருக்கிறது. பிரும்மா, விஷ்ணு உருத்திரன் இந்திரன் முதலிய தேவதைகளுக்கு இவைகளால் மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது என்று புராணங்களில் காணப்படுகிறது.

2. உருத்திராக்ஷத்தின் தோற்றத்தைப்பற்றி மற்றும் சில புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருசமயம் ஸர்வேசுவரராகிய ஸதாசிவரின் இளைய குமாரர் கந்தபெருமான், தனது தந்தையிடம் " ஸ்வாமி! கருணைகூர்ந்து எனக்கு மிகத் தூய்மையான உருத்திராக்ஷத்தின் தோற்றத்தைப்பற்றியும் அதன் பெருமையைப் பற்றியுமுள்ள உண்மையான விஷயங்களைச் சொல்லவேண்டும்", என்று வேண்டினர்.

3. மிகுந்த அன்புக்குரிய மகனுகிய கார்த்திகேயருடைய இந்தக் கேள்விக்கு விடையாக ஸதாசிவர் கூறியதாவது:— "கந்தனே! முற்காலத்தில் திரிபுராசுரன் என்ற ஒரு பெரிய அசுரன் இருந்தான்.

அவன் தன்னுடைய பராக்கிரமத்தால் எல்லா தேவர்களையும் விரட்டியடித்துவிட்டு மூவுலகத்திற்கும் தலைவனானான். அவனுடைய அக்கிரமச் செயல்களைக்கண்டு அஞ்சிய தேவர்கள் எல்லோரும் என்னிடம் வந்து அவனுடைய அக்கிரமச் செயல்களிலிருந்து தங்களைக்காக்க அவனை அழிக்கும்படி வேண்டினர். மிகவும் பயந்த தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி நான் உடனே வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு ஒரே பாணத்தால் மூன்று உலகம் முழுவதையும் மறைத்துக்கொண்டிருந்த திருபுராசுரனைக்கொன்றேன். அவனைக் கொன்ற அந்த பாணம் கோடி சூரியர்களின் ஒளியைவிட அதிக மாக ஒளி வீசியது. அந்த பாணத்தின் ஒளியால் அங்கிருந்த தேவர்களுடைய கண்களும் என்னுடைய கண்களும் மூடி மூடித் திறந்தன. திடீரென என் கண்களிலிருந்து கண்ணீர் பெருகத் தொடங்கின. அக்கண்ணீரின் சில பிந்துக்கள் பூலோகத்தில் விழுந்தன. பூமியில் விழுந்ததுமே அக்கண்ணீர்ச் சொட்டுக்கள் உருத்திராக்ஷ மரங்களாக மாறின. குழந்தாய் முருகனே! நான் உருத்திராக்ஷத்தின் தோற்றத்தைப்பற்றிக் கூறினேன். இப்போது உருத்திராக்ஷத்தின் பெருமையைப் பற்றியும் அதை அணியும் முறையையும் அடையாளங்களுடன் சொல்லுகிறேன். கவனமாகக் கேட்பாயாக.

உருத்ராக்ஷங்கள் 1 முகத்திலிருந்து 14 முகம்வரைஇருக்கின்றன. இவைகளைப் பொர்ப்பதாலும் தாடுவதாலும் சுலபமான பயன்கள் ஏற் படுகின்றன. அவைகளின் மாலையை அணிவதால் கோடிக்கணக்கான பயன்கள் ஏற்படுகின்றன. உருத்திராக்ஷ மாலையினால் ரகஸ்யமான என்னுடைய பஞ்சாக்ஷரீ மந்திரத்தை ஜபம் செய்யும் என் பக்த னுக்கு நான் கோடிக்கணக்கான புண்ய பலன்களைக் கொடுக்கிறேன். அவனுக்கு இயமபுரம் செல்லுதல் ஏற்படாது. அவனுக்கு அகால மரணம் ஏற்படாது. வியாதிகளிலிருந்து விடுபடுவான்; அவ்வாறே மரணத்திற்குப் பிறகு அவன் என்னுடைய சிவலோகத்தில் வசிப்பான். எல்லாத் தேவதைகளுக்கும் அரக்கர்களுக்கும் நான் வணங்கத் தகுந்தவனாகவும் பூஜிக்கத்தக்கவனாகவும் இருப்பதுபோல் பூலோகத்தில் உருத்ராக்ஷத்தை அணிந்துகொண்டிருக்கும் மனிதன் உலகில் உள்ள எல்லா மனிதர்களாலும் வணங்கத்தக்கவனாகவும் பூஜிக்கத்தக்கவனாகவும் ஆகிறான். இதில் ஒருவித ஐயப்பாடும் இல்லை. உலகில் எந்த மனிதன் தூய்மையான நடத்தையுடன் உருத்ராக்ஷ மாலையை அணிந்துகொண்டிருக்கிறானோ அவனுக்கு முற்பிறவிகளால் ஏற்படும் எல்லாப் பாபங்களும் க்ஷணப்பொழுதில் சாம்பலாகின்றன. என் கருணையால் அவனுக்கு ஸகலபோகங்களும் முக்தியும் கிட்டும். எல்லா வேதங்களும் உருத்ராக்ஷத்தின் பெருமையைப்பாடியிருக்கின்றன. பூலோகத்தில் ஒவ்வொருமனிதனும்

உருத்திராக்ஷங்களை அணியவேண்டும். வழவழப்பாயும் உறுதி வாய்ந்தவைகளாயும், பெரிய உருவத்தில் உள்ளவைகளாயும் முட்கள் உள்ளவைகளாயும் உள்ள உருத்திராக்ஷங்கள் நினைத்ததைக் கூட்டி வைக்கும்; புத்தியையும் முக்தியையும் அளிக்கும். அதுபோல் எந்த உருத்திராக்ஷத்தின் முகம் (துவாரம்) இயற்கையாகவே அமைந்துள்ளதோ அது மிகச் சிறந்த பயனளிக்கும். மனிதனால் செய்யப்பட்ட துவாரங்களையுடைய உருத்திராக்ஷங்கள் மத்திபமான பயனை அளிக்கின்றன. 550 உருத்திராக்ஷங்களைத் தலையிலும், 360 உருத்திராக்ஷங்களாலாகிய மூன்றுவடம் பூணூலையும், 108 உருத்திராக்ஷங்களாலாகிய மாலையையும் மூன்று உருத்திராக்ஷங்களைச் சிகையிலும் ஒவ்வொரு காதிலும் ஆறு உருத்திராக்ஷங்களைக் குண்டல (காதணி) மாகவும், ஒவ்வொரு மணிக்கட்டிலும் 19 உருத்திராக்ஷங்களையும் 5 உருத்திராக்ஷங்களை இடுப்பிலும் அணிபவர்கள் என் ஸ்வரூபத்தையே அடைந்துவிடுகிருர்கள். பகலில் உருத்திராக்ஷமாலை அணிவதால் இரவில் செய்தபாவமும், இரவில் அணிவதால் பகலில்செய்த பாவமும் அழிகின்றன.

5. உருத்திராக்ஷங்களின் தோற்றத்தையும் அவைகளின் பெருமையையும் கேட்டுவிட்டு திருமுருகர் தனது தந்தையான சங்கரரிடம் "ஒருமுகம், இருமுகம், மும்முகம், நான்குமுகம், ஐந்துமுகம், ஆறுமுகம், ஏழுமுகம், எட்டுமுகம், ஒன்பதுமுகம், பத்து முகம், பதினெரு முகம், பன்னிரண்டுமுகம், பதின்மூன்றுமுகம், பதினன்கு முகம் உள்ள உருத்திராக்ஷங்களின் சிறந்த குணங்களையும் அவைகளை அணியும் முறைகளைப்பற்றியும் தயவு செய்து கூறுவீர்களாக" என்று கேட்டார். குமாரனின் இக்கேள்விக்குப் பின்வருமாறு (ஒன்று முதல் பதினன்கு முகங்கள் வரைஉள்ள உருத்திராக்ஷங்களின் குணத்தையும் அணியும் முறையையும்) கூறினர்.

## ஒருமுக உருத்திராக்ஷம்

இது சிவஸ்வரூபமேயாகும். இதை அணிவதால் பிரும்மஹத்தி பாபம் தொலைகிறது.

**அணியும்முறை :**

"ஓம் ஏம் ஹ்ரம் ஔம் ஐம் ஓம்" —என்பது மந்திரம்.

அஸ்ய ஸ்ரீ சிவமந்த்ரஸ்ய ப்ராசாத: ரிஷி: ] பங்தி: சந்த: ] சிவோ தேவதா ] ஹங்காரோ பீஜம் ] ஔம் சக்தி: ம ம சதுர்வர்க சித்யர்த்தம் ருத்ராக்ஷ தாரணர்த்தே ஜபேவிநியோக: ] வாமதேவ ரிஷயே நம: சிரஸி ] பங்க்திச் சந்தஸே நமோமுகே ] ஓம் ஏம் ஐம் நம: ஹ்ருதி ] ஹம் பீஜாய நமோ குஹ்யே ] ஓம் சக்தயே நம: பாதயோ:

## அடுத்துக்கரநியாசம்

ஓம் ஓம் ஹாம் அங்குஷ்டாப்யாம் நம: ஓம் ஐம் ஹ்ரீம் தர்ஜநீப்யாம் ஸ்வாகா ! ஓம் ஹ்ரீம் ஹ்ரும் மத்யமாம்யாம் வஷட் ! ஓம் ஹ்ரைம் அநாமிகாப்யாம் ஹும் ! ஓம் ஐம் ஹ்ரௌம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட் ! ஓம் உம் ஹ: கரதலகரப்ருஷ்டாப்யாம் பட் !

## அடுத்து அங்கந்யாச :

ஓம் ஓம் ஹ்ராம் ஹ்ருதயாயநம : ! ஓம் ஐம் ஹ்ரீம் சிரஸே ஸ்வாஹா ! ஓம் ஹ்ரம் ஹ்ரூம் சிகாயை வஷட் ! ஓம் ஔம் ஹ்ரைம் கவசாய ஹும்.

## அடுத்துத் தியானம்

முக்தாபீந பயோத மௌக்திக ஜபாவர்ணை : முகை : பஞ்சபி : த்ரயக்ஷை : ராஜிதமீசமிந்துமுகுடம் பூர்ணேந்துகோடி ப்ரபம் சூலம் டங்க க்ருபாணவஜ்ரதகநாத் நாகேந்த்ரகண்டாசுகம் ஹஸ்தாப்ஜை : அபயம் வராந்ச தததம் தேஜோஜ்வலம் சிந்தயே.

மேகம், முத்து, செம்பரத்தை இவைகள் போல் நிறம் வாய்ந்து மூன்று கண்களுடன் கூடிய ஐந்து முகங்களோடு விளங்கியும் சந்திரனைச் சிரஸில் கொண்டும் கோடி பூர்ண சந்திர காந்தி பொருந்தியும், சூலம், கோடரி வாள், வஜ்ரம், அக்னி, பாம்பு, மணி கிளி, அபயம், வரம் இவைகளைக் கைகளில் தாங்கிக்கொண்டும் தேஜஸ் பொருந்தியுமுள்ள ஈசனை த்யானம் செய்கிறேன்.

இவ்வாறு

தியானித்து மானஸிக உபசாரங்களால் பூஜித்து ஆயிரந்தடவை (மந்த்ரத்தை) ஜபிக்கவேண்டும். பிறகு எதிரில் அருகில் உள்ள கடத்தின் மேல் செப்புப் பாத்திரத்தை வைத்து அதில் ருத்திராக்ஷத்தைப் போட்டு 10 முறைப்ராணாயாமம்செய்து பிறகு இடதுபாகத்தில் ஜல பாத்திரத்தை வைத்துக்கொண்டு அந்தத் தண்ணீரில் இடதுகையை வைத்துக்கொண்டு வலது பாணி (உள்ளங்கையால்) யால் 1000 தடவை ஜபிக்க வேண்டும். மறுபடி அதன்மேல் தண்ணீரை ஊற்ற வேண்டும். பிறகு உருத்திராக்ஷத்தை அணியவேண்டும். இவ்வாறே மற்றவைகளுக்கும் செய்க.

## இருமுக உருத்திராக்ஷம்

இருமுக உருத்திராக்ஷம் தேவ தேவனாகிய அர்த்த நாரீசுவர ஸ்வரூபமாகும். இந்த சிவம் சக்தி வடிவான உருத்திராக்ஷத்தை அணிவதால் பசுவைக்கொன்ற பாவமும் அகலும்.

**அணியும் முறை :**

"ஓம் க்ஷ்ரீம் ஹ்ரீம் க்ஷ்ரௌம் வ்ரீம் ஓம்" என்பது மந்திரம். அஸ்ய ஸ்ரீ தேவ தேவேச மந்த்ரஸ்ய அத்ரி : ரிஷி : ; காயத்ரீசந்த :; தேவ தேவேசோ தேவதா; க்ஷ்ரோம் பீஜம்; க்ஷ்ரௌம் சக்தி : ; மம சதுர்வர்க ஸித்யர்தே ருத்ராக்ஷ தாரணார்தே ஜபே விநியோக : அத்ரி ரிஷயே நம : சிரஸி; காயத்ரீ சந்தஸே நமோ முகே ; தேவ தேவேசாய நமோ ஹ்ருதி; க்ஷ்ரோம் பீஜாய நமோகுஹ்யே ; க்ஷ்ரீம் சக்தயே நம : பாதயோ :

**அடுத்து கரந்யாசம்**

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம : ஓம் க்ஷ்ரௌம் தர்ஜநீப்யாம் ஸ்வாஹா । ஓம் ஹ்ரீம் மத்யமாப்யாம் நம : । ஓம் க்ஷ்ராம் அநாமிகாப்யாம் ஹும். ஓம் க்ஷ்ரீம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட். ஓம் ஓம் கரதலகரப்ருஷ்டாப்யாம் பட்.

**அடுத்து அங்கந்யாஸம்**

ஓம் ஓம் ஹ்ருதயாய நம : । ஓம் க்ஷ்ரௌம் சிரஸே ஸ்வாஹா । ஓம் ஹ்ரீம் சிகாயைவஷட் । ஓம் க்ஷ்ரௌம் கவசாயஹும் ஓம் வ்ரோம் நேத்ரத்ரயாய வௌஷட் । ஓம் ஓம் உம் அஸ்த்ராய பட்.

**அடுத்துத் தியானம்**

தபநஸோம ஹுதாசன லோசனம் கனஸமான களம்சசி ஸுப்ரபம்
அபயசக்ர பிநாக வராந் கரை: தததம் இந்துதரம் கிரீசம் பஜேத் ।

சூரியன், சந்திரன், அக்னி இவர்களைக் கண்களாகப் பெற்றவரும் மேகத்துக்கொப்பான கண்டம் வாய்ந்தவரும், அபயம், சக்ரம், பிநாகம், வரம் இவைகளைக் கைகளில் தரித்தும் சந்திரனைத் தாங்கியுமிருக்கிற மலையில்வாழும் ஈசனைப் பூசிக்கிறேன்.

(தொடரும்)

---

**குறிப்பு :—** இக்கட்டுரை, நாகபுரி மோதியா ஸ்ரீ ஸ்கந்த சமாஜ 1977 ஸ்கந்த சஷ்டி மகோத்சவ மலரில் வெளிவந்த இந்தி கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

( தொடர்ச்சி. மலர் 37. இதழ் 4. பக்கம் 202. )

**கடிதங்கள்:**

வை. பக்கிரிசாமிச் செட்டியார்,
தலைமையாசிரியர்,
6-அய்யனார்கோயில்தெரு.

விருத்தாசலம் 606001
14—4—78.

* * அடியேங்கள் உய்யும்வண்ணம் சென்றமாதம் வானொலியில் அற்புதமாகத் தாயுமானவர்தவநெறிக்கு விளக்கம்அளித்தருளியதைத் திருச்சி வானொலியின் ''நெறிவிளக்கம்'' என்ற பகுதியில் குடும்பத்துடன் அனைவரும் கேட்டு உய்ந்தோம். நேரிலே தரிசித்துய்ந்த நினைவு அனைவர் உள்ளத்திலும் எழுந்தது. * *

S கிருஷ்ணமூர்த்தி

சூரியனார்கோயில்
2—4—78.

* * தாயுமானார் பாட்டுக்களைப்பற்றி அடியேன் இதுவரை நினைத்துக்கொண்டிருந்தது, தட்சிணாமூர்த்தி தோத்திரம் ''சிரகிரி விளங்கவரு தட்சிணாமூர்த்தியே சின்மயானந்த குருவே'' என்பதும் ''வரை ராஜனுக்கு இருகண்மணியாய் உதித்த மலைவளர் காதலிப் பெண்ணுமையே'' என்ற தேவி தோத்திரமும் பக்திச் சுவையோடு அமைந்ததெனப் போற்றி இருக்கிறேன்.

ஆனால், வானொலியிலே ''நெறிவிளக்கம்'' என்ற பகுதியிலே 9, 10, 11—2—78 தேதிகளில் சமூகம் திருவாக்கினிடமாக வந்தனவற்றைச் செவிமடுத்தபோது தாயுமான சுவாமிகள் பாடல்கள் சைவத்தோடு தொடர்புடையது. வேதாந்தத்தின் தெளிவாம் சைவசித்தாந்தக் கருத்தோடு கூடியது. திருமூலர் மரபில் வந்தவர் தாயுமானார் என்பதும், சமரசத்துக்கு விளக்கமும் கொல்லாமை முதலிய நீதிகளும் பராபரக்கண்ணியில் பக்திச்சுவையும் அருட்சுவையும் நனி சொட்டச்சொட்ட அமைந்த பாங்கினைத் திருவுளம்பற்றி சமூகம் இசையுடன் உருக்கமாக மொழிந்தது கேட்டுப் பயன்பெறத்தக்க வகையில் அமைந்ததென எண்ணி இச்சிறிய கருத்துக்களை வானொலிமூலம் அருளியமைக்கு மீண்டும் சமூகத்திற்கு அடியேனுடைய பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

உ

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 26-வது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்** ஜன்ம நட்சத்திரத் திருநாட்களில் மாதந்தோறும் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற சிவதலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்துவரும் முறையில் காளயுக்தி ஆண்டு சித்திரைத்திங்கள் 4-ஆம் நாள் (17—4—78) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் உறையூர் என வழங்கப்படும் திருமூக்கீச்சரம் ஸ்ரீ பஞ்சவர்ணேசுவரர் திருக்கோயிலிலும், மாலை 6 மணி அளவில் திருச்சிராப்பள்ளி ஸ்ரீ தாயுமானவர் திருக்கோயிலிலும் சிறப்பு வழிபாடுகளும் சமயவிரிவுரைகளும் நிகழும். அன்பர்கள் வந்து தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுறுவார்களாக.

**உறையூரில்: 17-4-78 திங்கட்கிழமை காலை 10-மணியளவில்**

**தலைவர் :** **திரு. விஜய. திருவேங்கடம்**
(அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சிப் பொறுப்பாளர்)

**விரிவுரைகள் : வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் M A,**
(தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர்)
— "சிவலிங்க தத்துவம்"

**புலவர். திரு. மு. வைத்தியநாதன்**
(திருச்சிராப்பள்ளி)
— "மூவர் தமிழ்"

**திருச்சிராப்பள்ளி மலைக்கோயில் சித்திர மண்டபத்தில் மாலை 6 - 30 மணி அளவில்:**

**தலைவர் :** செந்தமிழ்க்கவிதைச்செம்மல், கவிதாமணி
**திரு. அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்**
(திருச்சிராப்பள்ளி)

**விரிவுரைகள் : இலஞ்சி, திரு. முத்துக்குமரசாமி**
(திருச்சிராப்பள்ளி)
— "தாயுமானவர்"

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் M. A.,**
(தருமபுரம்.)
— "ஞானசம்பந்தர்"

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மாத ஜன்ம நட்சத்திரவழிபாடு 21—3—78 செவ்வாய்க்கிழமையன்று நண்பகலில் திருப்பராய்த்துறை ஸ்ரீ பொன்மயிலம்மை உடனுகிய ஸ்ரீ பராய்த்துறை நாதர் திருக்கோயிலிலும் அன்றுமாலை தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கற்குடி ஸ்ரீ அஞ்சனுட்சி உடனுகிய ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகள் முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது 'திருப்பராய்த்துறை, திருக்கற்குடித் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. அவ்வத் தலங்களிலும் தேவாரத் திருப்பதிகங்களைதிருவையாறுதேவஸ்தானம்ஓதுவார் திரு முருகைய்யா தேசிகர் அவர்கள் பாராயணம் செய்தார்கள்.

திருக்கற்குடியில் வழிபாட்டிற்குப் பின்னர் சமய விரிவுரைக் கூட்டம், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கச் செயலர் திரு. மா. பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி, தமிழாசிரியர், புலவர், திரு. மு. வைத்தியநாதன் அவர்கள் 'திருப்பதிகங்களின் சிறப்பு' என்ற தலைப்பிலும், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ. அவர்கள் 'ஆலய வழிபாடு' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினுர்கள். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## வேளூரில் பங்குனி உத்திரத் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமிதேவஸ்தானத்தில் பங்குனி உத்திரத் திருவிழா 15—3—78 புதன்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 15—3—78 அன்று துவஜாரோகணமும் 19—3—78 அன்று சகோபுரக்காட்சியும் 21, 22—3—78 ஆகியநாட்களில் திருத்தேர்த் திருவிழாவும் 24—3—78 அன்று சித்தாமிர்தத்தில் உருத்திரபாதத் தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. நாள்தோறும் காலை மாலை

இருவேளைகளிலும் விசேஷ நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது. விழா நாட்களில் சமய விரிவுரைகளும் நடைபெற்றன. 17—3—78 அன்று தருமையாதீனத் தமிழ்ப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் "ஞானத்தமிழ்" என்ற தலைப்பிலும் 20—3—78 அன்று புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். 18—3—78 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. தருமையாதீனத் தமிழ்ப் புலவர் வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ., அவர்கள் "அப்பர் அருந்தமிழ்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றி தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு திருமுறைகள் யானைமேல் அலங்காரம் செய்யப்பெற்று திருவீதியுலாவாக எழுந்தருளச் செய்யப்பெற்றன. அன்பர்கள் வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## பேரளத்தில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீபவானியம்மை உடனாகிய ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் தீர்த்தத்திருநாள் 24—3—78 வெள்ளிக்கிழமையன்று சிறப்புறநிகழ்ந்தது. அன்று காலை பஞ்சமூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தபின்னர், இடப வாகனருடராய் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி அக்கினி புஷ்கரணி தீர்த்தத்தில் உருத்திரபாதத் தீர்த்தம் கொடுத்தருளல் நிகழ்ந்தது. இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது. அன்று மாலை தருமையாதீனம் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் அவர்கள் 'திருநீலகண்டர்' என்னும் தலைப்பில் சமயவிரிவுரைகள் நிகழ்த்தினார்கள். பக்தர்கள் பலர் தீர்த்தத் திருநாளில் கலந்துகொண்டும், சமயவிரிவுரையைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## திருபுவனத்தில் உருத்திரபாதத் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி உடனாகிய ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் திருநாள் கொடியேற்றம் 15—3—78 புதன்கிழமை அன்று நடைபெற்றது. அன்று முதல் பத்து நாட்கள் விழா. சிறப்புற நிகழ்ந்தது. காலை மாலை இருவேளைகளிலும் பஞ்ச மூர்த்திகள் திருவீதியுலாக்காட்சியும் நடைபெற்றது.

19—3—78 ஞாயிற்றுக்கிழமை அன்று பெருமான் தன்னைத்தான் அர்ச்சித்தலும் சகோபுரத்தில் இடபவாகனக் காட்சியும் நடைபெற்றன. 21—3—78 செவ்வாய்க்கிழமை அன்று திருக்கல்யாண விழாவும், வெள்ளிரதத்தில் திருவீதியுலாக் காட்சியும்நடைபெற்றன. 23—3—78 வியாழக்கிழமையன்று திருத்தேர் விழாவும் 24—3—78 வெள்ளிக் கிழமையன்று காலையில் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளலும் கொடி இறக்கமும் நிகழ்ந்தன. இவ்விழாநாட்களில் விசேஷ நாதஸ்வர இன்னிசையுடன் வாணவேடிக்கைகளும் நடைபெற்றன. பக்தர்கள் பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

திருவிழாநாட்களில் சமயவிரிவுரைகள் மாலை 6 மணியளவில் தொடங்கி நடைபெற்றன. 18—3—78 சனிக்கிழமை யன்று தருமபுரம் பேராசிரியர், வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்கள் 'திருநீலகண்டர்' என்னும் தலைப்பிலும், 19—3—78 ஞாயிற்றுக்கிழமையன்று தருமையாதீனத்தமிழ்ப்புலவர், வித்துவான். சிரோமணி, திரு. வி. சபேசன்அவர்கள் 'கண்ணப்பர்' என்ற தலைப்பி லும், விரிவுரையாற்றினார்கள். 20—3—78 திங்கட்கிழமை யன்று திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நடைபெற்றன. தருமையாதீனத் தமிழ்ப்புலவர் டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் M. A. Phd., அவர்கள் 'காரைக்கால் அம்மையார்'என்னும் தலைப்பில் விரிவுரையாற்றி தேவாரவகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி னார்கள். திருமுறைகள் யானைமீது வைத்து அலங்காரம் செய்யப் பெற்று பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு திருவீதியுலா நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் திருவிழாவினைக் கண்டு தரிசித்தும் விரிவுரைகளைக்கேட்டும் பயன் பெற்றனர்.

## ஸ்ரீ சரபேசுவரர் உற்சவம்

திருபுவனத்தில் 26—3—78 ஞாயிறன்று ஸ்ரீ சரபேஸ்வரர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. அன்று சரபவேள்வியும் ஏகதின லட்சார்ச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. அர்ச்சனை காலையில் தொடங்கி மாலையில் நிறைவுற்றது. 2—9—73 முதல் தொடங்கி நடைபெற்றுவரும் கோடியர்ச்சனையில் அரைக்கோடி அர்ச்சனை நிறைவு விழா இன்றுசிறப்பாக நடந்தது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். இரவு வெள்ளி இரதத்தில் சரபேஸ்வரர் திருவீதியுலா விசேஷ நாதஸ்வர இன்னிசை யுடன் சிறப்புற நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் ஸ்ரீ சரபேஸ்வரரின் திரு வருட் பிரசாதம் பெற்றுப் பயன் பெற்றனர்.

# சென்னை, தருமை ஆதீன சமயப்பிரசார நிலையம்

**நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள் :—**

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் காரிநாயனுர் கோச்செங்கட் சோழநாயனுர் கணநாத நாயனுர், முனையடுவார் நாயனுர், காரைக்காலம்மையார், இவர்கள் குருபூஜைகள் முறையே 4—3—78, 8—3—78, 17—3—78, 20—3—78, 27—3—78 ஆகிய நாட்களில் நடைபெற்றன. திரு. V. N. ஆறுமுக முதலியார் அவர்கள் பெரியபுராணம் வாசித்து விளக்கம் செய்தார்கள். திருமுறை பயிலும் மாணவ மாணவிகளும், ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் நிலைய அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர்.

**கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :—**

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 15—3—78 புதன்கிழமை மாலை 7-மணிக்கு நடைபெற்றது. விழாவிற்குத் தஞ்சை ஸ்ரீ T. S. சுந்தரேச சர்மா அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. S. ஞானப் பிரகாசம் வேளூர்ப் பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாராயணம் செய்தார். நிலையத்தில் ஸ்ரீ உச்சிஷ்டகணபதி ஹோமம் செய்து வந்த, விழாத் தலைவர் அவர்கள் ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி சிறந்த மூர்த்தி. நான் 50 வருஷ காலமாக உபாசனை செய்து வருகிறேன். அதனால் பல நன்மைகளை அடைந்தும் வருகிறேன். இதன் உருவம் அம்பாளுடன் கூடித் தனிச் சிறப்பு வாய்ந்தது. இப்பெருமானை வழிபட்டால் வியாதி நீங்கும். பிறர்மூலம் துன்பம் ஏற்படாமல் காக்கும். எல்லோரையும் பிரியமாக நடந்துகொள்ளச் செய்யும் சகல இஷ்டங்களையும் பூர்த்திசெய்து வைக்கும். சுலபமாக ஜெபம் செய்து சீக்கிரம் சித்தி அடையலாம்.

ஒவ்வொருவருக்கும் துணைவேண்டும். மனைவிக்குக் கணவன் துணை. குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் துணை. இது போல தெய்வத்தின் துணை ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியம். தெய்வத்துணை இருந்தால் வாழ்க்கை சுபிட்சமாக நடக்கும். துன்பக் காலத்தில்வந்து உதவி செய்து நம்மை வாழவைக்கும். ஏதாவது ஒரு தெய்வத்தை வழிபட்டு உபாசனைசெய்தால் துணையோடுவாழலாம். ஸ்ரீ கணபதியை எல்லோரும் வழிபாடு செய்யலாம். வழிபடுவதற்கும் சுலபமானது. எங்கும் காணப்படும் மூர்த்தி விநாயகர். இவரை ஹோமம்செய்து வழிபட்டால் நம்முடைய இஷ்ட சித்தி நிறைவேறும்.

தருமை யாதீனத்திற்குச் சொந்தமான கோயில்களில் பிரசித்தி யடைந்துள்ள வேளூரிலிருந்து சந்தனக் குழம்பு வழங்கும் விழா மாதா மாதம் இங்கு நடப்பது போற்றுதற்குரியது. தருமையாதீனம்

பெயருக்கேற்ப தருமத்தையும், சமயத்தையும் பரப்பிவருகிறது என்று தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். தலைமையுரைக்குப் பின்னர் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

**மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :**

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு 26—3—78 ஞாயிற்றுக்கிழமை காலை பொன்னேரி தாலுக்கா மீஞ்சூருக்கு அருகாமையிலிருக்கும் மேலூரில் உள்ள ஸ்ரீ திருவுடையம்மன் சமேத ஸ்ரீ திருமணங்கீஸ்வர சுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஆலயத்தில் உள்ள எல்லா மூர்த்திகளுக்கும் அர்ச்சனையும் செய்யப்பட்டன. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும் திரு. N. இராமமூர்த்தி அய்யரும் குமாரி R. கௌரி குழுவினரும் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பேசிய திரு. P. ஆலாலசுந்தரம் செட்டியார் ஸ்ரீ திருவுடையம்மனின் பெருமைகளை எடுத்துச் சொல்லி, இந்த அம்பாளை வழிபட்டுப் பிரார்த்தித்துக்கொண்டால் நம் பிரார்த்தனைகளை நிறைவேற்றிவைப்பாள். நமக்கு வரும் இடையூறுகளையும் நீக்கிவைப்பாள் என்று கூறி இந்த அம்பாளின் அனுக்கிரஹத்தால், ஒரு சமயம் தனது வீட்டில் திருடர்கள் நுழைந்து திருட இருந்த சமயத்தில் இந்தக் கோயிலிலிருந்து நான் நேரத்தில் வீட்டிற்குச் சென்றபடியால் திருடர்கள் ஓடிவிட்டார்கள் என்றும் கூறி இந்த அம்பாளின் மகிமையைப் போற்றினார்கள்.

அடுத்துப் பேசிய திரு. N. இராசு அவர்கள் மக்கள் அதிகம் வராத புராதனக் கோயில்களில் சென்னை சமயப்பிரசார நிலையம் வழிபாடுகள் நடத்தினால், கோயில்கள் நன்றாகப் பராமரிக்கப்பட்டு ஜனங்களும் அதிக அளவில் வந்து வழிபட்டுச் செல்வார்கள் என்று சொன்னார்கள்.

பின்னர்ப் பேசிய குமாரி R. கௌரி தனது பெற்றோர்களுக்குச் சமீபத்தில் திருக்கடவூரில் நடந்த சஷ்டியப்த பூர்த்தி விழாவை யொட்டி ஸ்ரீ திருவுடையம்மன் கோயிலில் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தால் நடத்தப்படும் வழிபாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. பெற்றோர்களும் குடும்பத்திலுள்ள மற்றவர்களும் அடைந்த பெரிய பாக்கியம் என்று கூறி ஸ்ரீ திருவுடையம்மனின் பெருமைகளையும் எடுத்துச் சொன்னார்கள்.

பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் பக்தர்கள் வழிபாட்டில் கலந்துகொள்வதன் மூலம்தான்

இறையருளைப் பெறமுடியும். மனம், மொழி, மெய்களால் வழிபாடு செய்வதன்மூலமாக நம்முடைய தீவினைகளைப் போக்க முடியும். நமது கஷ்டங்களைப் போக்குவதற்கு வழிபாடு ஒரு சிறந்தபரிகாரம். சிவனை நோக்கிச் செய்கின்ற செயல்களெல்லாம் சிவ புண்ணியமாகிறது. அதற்கு வழிபாடுதான் சிறந்த சாதனம், அதனால் நிலைய அன்பர்கள் தவறாமல் வழிபாட்டில் கலந்து பயன்பெற வேண்டும் என்று கூறி, கோயில் நிர்வாக அதிகாரிக்கும், மற்றவர்களுக்கும் நன்றி கூறிக் கூட்டத்தை நிறைவுசெய்தார்கள்.

**திரு. N இராமமூர்த்தி அய்யர் அவர்களுக்குப் பாராட்டு விழா :**

திரு. N. இராமமூர்த்திஅய்யர் அவர்களுக்கு 17—3—78 அன்று திருக்கடவூரில் நடந்த சஷ்டியப்த பூர்த்தி விழாவை யொட்டி நிலைய அன்பர்கள் உதவியால் நிலையத்தின் சார்பில் 26—3—78 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு, திரு. இராமமூர்த்தி அய்யர் தம்பதிகளுக்கு சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. விழாவிற்கு, சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசம் திருமுறைப்பாராயணம் செய்தார். விழாத்தலைவர், திரு. இராமமூர்த்தி அய்யர் அவர்கள் இந்நிலையம் தோன்றின நாளிலிருந்து இந்நாள் வரைக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சமயத்தொண்டு செய்துவருவதைக் குறிப்பிட்டு, தகுதி வாய்ந்த பண்பாடுள்ள பக்த சீலருக்கு, சென்னை சமயப் பிரசார நிலையம் பாராட்டு விழா நடத்துவது மிகவும் சிறந்த நிகழ்ச்சியாகும். அவரும் அவரது குடும்பத்தினரும், குறிப்பாக அவரது புதல்வி குமாரி கௌரியும் ஆற்றிவரும் சமயத்தொண்டு களைக் கூறி இத்தம்பதிகள் இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ வேண்டும். தக்கவர்களுக்கு தக்க இடத்திலிருந்து பாராட்டு கிடைப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று கூறி திரு. இராமமூர்த்தி அய்யர் தம்பதிகளுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வாழ்த்தினார்கள்.

சிம்மக்குரல் திரு. சீதாபதி திரு. V. N. ஆறுமுக முதலியார் திரு. R. சிவஞானம் செட்டியார், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் திரு. C. செல்வநடராஜ முதலியார், புரசை திருநெறிக் கழகம் செயலர் திரு. சுந்தரம் போன்ற இதர அன்பர்களும் திரு. இராமமூர்த்தி அய்யர் தம்பதிகளுக்கும் அவர்களது குடும்பத்தின ருக்கும் வாழ்த்துரைவழங்கினார்கள். புலவர். திரு K. ஆறுமுகம்அவர்கள் வாழ்த்துமடல் ஒன்றை வாசித்தளித்தார். திரு. இராமமூர்த்தி அய்யர் தம்பதிகள் சார்பில் அவர்களது புதல்வி குமாரி R. கௌரி எல்லோ ருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

**ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி ஹோமம் :**

சென்னை, தருமையாதீன சமயப்பிரச்சார நிலையத்தில் 26—2—78 முதல் 17—3—78 முடிய 20 நாட்களுக்குத் தஞ்சாவூர் ஸ்ரீ T. S. சுந்தரேச சர்மா அவர்களால் ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி லக்ஷஹோமம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் காலை சுமார் 8-30 மணிக்கு ஹோமம் தொடங்கி சுமார் 11-மணி வரையிலும் மாலை 4-மணியிலிருந்து இரவு மணி 7 - 15 மணிவரையிலும் நடத்தப்பெற்றது. பூர்ணாகுதிக்குப் பின்னர் ஹோம குண்டத்திற்கு அலங்காரம்செய்து பூஜைசெய்து, இரவு 8-மணிக்கு ஹோமம் பூர்த்தி செய்யப்பட்டது.

18—3—78 அன்று சகலதிரவிய ஹோமமும், 19—3—78 காலை ஸ்ரீ உச்சிஷ்டகணபதி விக்ரஹத்திற்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், இரவு ஸ்ரீ உச்சிஷ்ட கணபதிக்கு டோலோத்சவமும் நடைபெற்றன.

மேற்படி ஹோமம் நடந்த நாட்களில் பஜனை, துதிப்பாடல் நிகழ்ச்சிகளும், ஹோமத்தைத் தரிசிக்க வரும் முக்கியஸ்தர்களின் சொற்பொழிவும் நடந்தன. H. R. E. டிபார்ட்மெண்ட் கமிஷ்ணர் துணைக்கமிஷ்ணர், உதவிக் கமிஷ்ணர் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் போன்றவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

---


## "ஞானசம்பந்தம்"

### தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

| | |
|---|---|
| **ஆண்டுச் சந்தா** (உள்நாடு) | ரூ. 7—00 |
| **ஆண்டுச் சந்தா** (சிலோன்) | 9—00 |
| **ஆண்டுச் சந்தா** (வெளிநாடு) | 15—00 |
| **ஆயுள் சந்தா** ... ... | 100—00 |

செயலாளர் :— ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம். 609001.
தஞ்சை மாவட்டம்.

# எதிர்காலம்

**ஜோதிஷம், திரு. A. இராசமாணிக்கம்**

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**( காளயுக்திஸு சித்திரைமீ 1வ முதல் 31வ முடிய )**

**( 14—4—1978 முதல் 14—5—1978 முடிய )**

[காளயுக்தி ஸு த்திற்கு இராசி ஆதாயாதி பலகணிதம் உள்பட]

| | | | |
|---|---|---|---|
| கே பு | சூ சு | | குரு சந் |
| | இராசி | | செ சனி |
| | | | |
| ல / | | | ரா |

| | | | |
|---|---|---|---|
| சனி | ரா சூ | ல / | |
| | அம்ஸம் | | |
| | | | செ |
| சந் குரு | | பு கே | சு |

ஸ்ரீபிங்களஸு பங்குனிமீ 31வ குருவாரம் திருவாதிரை நக்ஷத்திரம் தைதுலகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 41 நாழிகை 27½ வினடிக்கு அதாவது கலியுக சுத்ததினம் 1855146 நாள் 41நாழிகை 27விநடி 30 தற்பரை யளவில் தனுர் லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் இராசிமண்டலத்தில் கிரமமாக மாதவாக்கியங்களின்படி சஞ்சாரம் முடித்து, லோகரட்சகத்தை முன்னிட்டு வானமண்டலத்தில் நவநாயகர்களையும், உபநாயகர்களையும் ஏற்படுத்திக்கொண்டு கலியுகாப்தம் 5079, காளயுக்திஸு சௌரமான சித்திரைமாதப்பிரவேசம் செய்கின்றார். அன்று விஷுபுண்ணியகாலமாகும். குருபகவான் காளயுக்தி ஸுத்திற்கு மந்திரியாகிறார். மறுதினம் சித்திரைமீ முதல்தேதி யாகிறது. அன்றைக்கு வாக்கிய கணித ரீதியாய் பஞ்சாங்க சூரியன் புடம் இராசி 0, பாகை 1, கலை 17, விகலை 10, பஞ்சாங்க சந்திரன் புடம் இராசி 2, பாகை 25, கலை 24, விகலை 41. அன்று சூரியகதி 58. கலை, சந்திரகதி 722 கலை, திதி, கதி 664 கலை,. யோக கதி 780 கலை, கரணகதி 29 கலை இத்தியாதி

யின் பஞ்சாங்க கணன சுத்தக் காலவரையறையில் ஸ்ரீ காளயுக்தி ஞு சித்திரைமீ 1உ பிரகாசிக்கிறது.

சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனாவது:- லோகத்தில், பிரஜைகள் பிரயாசை மிகுந்தவர்களாக கிரியைகள் பல புரிந்து அபேட்சை நிறைவுற்றவர்களாகி நன்மையடைவர். சனிஸ்வரன் இராஜாவாகவும் குரு மந்திரியாகவும் இருப்பதால் தேசங்களில் மன்னர்கள் மந்திரிகளால் நல்ல பரிபாலனம் ஏற்பட்டு மக்கள் வாழ்க்கை வசதியும் ஆக்கமும் பெற்றுய்வார்கள். உலகில் ஏற்பட்டுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் தெய்வீகப் பொலிவுடன் வரப்பிரசாதமாக வந்துள்ள ஞானகுருமகான்கள் சிஷ்யகோடிகளுக்கு அனுக்கிரகிக்கின்ற உபதேசாதிகளால் லோகத்தில் சிஷ்யகோடிகள் விவேக பரிபூரணத்துவத்துடன் லோக தர்மம் முதலான நீதிகளுக்கு கர்த்தாவாகி தெய்வீகம் தழைக்க வாழ்வார்கள். தேவாலயங்களில் உற்சவங்கள், நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். பிரஜைகள் அனைவரும் மனத்தெளிவுடன் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼**
**( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )**

மேஷராசி 9 பாதங்களும் சுமார் பலனை நடக்கும். குடும்பா பிவிருத்தியில் பண வருமானங்கள் திருப்தியாக வந்துகொண்டிருக்கும் சகோதரருக்குப் பல்வலி நகச்சுற்றுப் போன்ற வெப்பாதிக்க நலிவுவந்து குணமாகும். மாத ஆரம்பத்தில் கால்நடை ஜீவன்களில் அற்ப பலன் தோன்றும் 10உ முதல் அதில் திருப்தி பலன் காணும். புத்திரர் சௌக்கியம் தாரசௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில் அலுவல்கள் நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும், வெள்ளி சனி சுபமாகும்.

ஞு ஆதாயம் 14, விரயம் 14, ஆரோக்கியம் 1, அனாரோக்கியம் 6, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 6, துக்கம் 3.

**2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½**
**( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி வு - வே. வோ. )**

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனலாபங்கள் வந்துகொண்டிருக்கும். குடும்பசுபிட்சம் நன்றாக இருந்துவரும். சகோதரருக்கு சௌக்கியம் தரும். வீடு வாகனாதிகள் சுகானுபவங்களில் இலட்சிய போக்காக செலவுகள் ஏற்படச்செய்யும். புத்திரர் நலனில் முதலீடு செய்யநேரிடும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில்களில் நற்பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

ஸூ ஆதாயம் 8, விரயம் 8, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 0, இராஜபூஜிதம் 0, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**
( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனலாபங்கள் மதிப்பாக வந்துகொண்டிருக்கும். தவிர்க்க இயலாத செலவுகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும், 10உ க்குமேல் ஓர் சுபவிசேஷம் நடக்கும். பிதாவிற்கு மனக்குறை உண்டாவதும் சரிசெய்வதும் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் காரியங்கள் வெற்றிகரமாகச் செயல் பட்டுவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

ஸூ ஆதாயம் 11, விரயம் 5, ஆரோக்கியம் 0, அனுரோக்கியம் 4, இராஜபூதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்**
( ஹி. ஹு. ஹே. ஹொ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களுக்கும் குடும்பாபிவிருத்தில் பணவரவுகளில் நல்ல நிலைமையாய் இருந்துவரும். வித்தியா வியாபாராதி எழுத்துத் துறைகளில் மாதப் பின்பகுதில் பிரசித்தம் ஏற்படும். சுபகாரியங்களில் விசேஷ செலவுகளை ஏற்படுத்தும். 10உ முதல் எல்லா விஷயங் களிலும் ஸ்லாக்கிய பலன்தரும். ஓர் வாகனம் வாங்குதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் அரசாங்க மதிப்பை ஏற்படுத்தும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

ஸூ ஆதாயம் 11, விரயம் 11, ஆரோக்கியம் 4, அனுரோக்கியம் 2, இராஜபூஜிதம் 2, இராஜகோபம் 6, சுகம் 7, துக்கம் 3.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**
( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் சுமாரான பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் சரளமாகவந்து கொண்டிருக்கும். அதற்கேற்ற செலவும் ஏற்படும். சகோதரர் சகோதரிகளின் சுபிட்சம் நன்ருக இருந்துவரும். வீடுவாகனுதிகளில் செலவாக இருப்பினும் ஆக்கமுடையதேயாகும். புத்திரர் நலம் நன்ருக இருந்துவரும். மனைவிக்கு இரத்த பித்த நலிவு வந்து குணமாகும். பூர்வ சொத்தில் சிறுபூசல்கள் வரினும் உடன் சரிபடும். ஜீவனுேபாயத்தில் சௌகரி யங்களை ஏற்படுத்தும். சனி ஞாயிறு சுபமாகும்.

ஷ ஆதாயம் 8, விரயம் 14, ஆரோக்கியம் 2, அனுரோக்கியம் 8, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 8, துக்கம் 0.

**6. கன்னி :– உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$**

( டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் சுமார்பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் 10உ முதல் தன தான்ய விருத்தியையும் சுபிட்ச நிலைமையையும் உண்டுபண்ணும். சகோதரருக்கு நற்பலன் தரும். மாதாபிதாக்களுக்கு சாதாரணமாக இருந்துவந்தஅல்லல் நீங்குவதாகி நிம்மதியளிக்கும். தெய்வானுக்கிரகத்திஞல் எல்லா நன்மைகளும் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் சந்திப்பு ஏற்படும். ஜீவனோபாயத்தில் 24உ அளவில் நற்பலன்வரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

ஷ ஆதாயம் 11, விரயம் 5, ஆரோக்கியம் 0, அனுரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

**7. துலாம் :– சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$**

( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனவரவுகள் போதுமான அளவிற்கு வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். 10உ முதல் வீடு வாகனுதிகளில் நல்ல நிலைமையை உருவாக்கும். வித்தியா வியாபாராதிகளில் நற்பலன்வரும். புத்திரனுக்கு தீர்த்த யாத்திராபலன் கிடைக்கும். மனைவிக்கு சாதாரணமாக நீர்குத்தல் போன்ற உஷ்ணாதிக்க நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். செய்தொழிலில் அலுவல்கள் திடமாக நடந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

ஷ ஆதாயம் 8, விரயம் 8, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 0, இராஜபூஜிதம் 0, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

**8. விருச்சிகம் :– விசாகம் $\frac{1}{4}$ அனுஷம் – கேட்டை.**

( தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவரவுகள் நல்லநிலைமையில் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு மனோவேகம் வந்து ஆறுதலாகும். வீடு வாகனங்களில் சௌகரியம் திருப்திதரும். புத்திரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். மனைவி வழியினர் சௌகரியங்களுக்கு ஈடுபாட்டினை ஏற்படுத்தும். கோர்ட்டு வழக்குகளில் ஜெயம்தரும். பெற்ருேரின் உடல் நலம் பாதித்து குணமாகும். செய்தொழில்களில் நன்மதிப்பு இருந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

ஷூ ஆதாயம் 14, விரயம் 14, ஆரோக்கியம் 1, அனாரோக்கியம் 3, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 6, துக்கம் 3.

**9. தனுசு :– மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**

(யே. யோ. பா. பி. பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சாதாரணபலனாக நடந்துவரும். குடும்பாபி விருத்தியில் தனவரவுகள் சீராக வந்துகொண்டிருக்கும். மூத்த சகோதரர் மனைவிக்கு உடலுபாதை ஏற்பட்டுக் குணமாகும். வீடு வாகனாதிகளின் சௌகரியங்கள் நல்ல நிலையில் இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் பிரசித்தம் ஏற்படும். பூமி இயந்திர வகையில் செலவினங்கள் மிகுந்துகாணும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கியபலனை தரும். செய்தொழிலில் அலைச்சலாக இருப்பினும் புத்திசாதுரியமும் புகழும் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

ஷூ ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அனாரோக்கியம் 4. இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

**10. மகரம் :– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசியில் 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தன வரவு செலவுகள் சரிசமனாக இருந்துவரும். சகோதரர் அம்மான்களின் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் ஓரளவு பலன் வந்துகொண்டிருக்கும். பூமி இயந்திர சம்பந்தமாக ஓர்வழக்கு ஏற்படும். 10உ க்குமேல் புத்திரிக்கு சுபம் நடக்கும். எதிர்பார்த்திருந்த பொருள் வந்து சேரும். மனைவிக்கு பித்தத்தால் நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும் செய்தொழிலில் ஓர் நன்மை ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

ஷூ ஆதாயம் 5, விரயம் 2, ஆரோக்கியம் 0, அனாரோக்கியம் 2. இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

**11. கும்பம் :– அவிட்டம் ½ – சதயம் பூரட்டாதி ¾**

( கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் போஜன சௌகரியங்கள் திருப்தி கரமாக இருந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு சௌக்கியம் தரும். வெள்ளி சிகப்புக் கற்கள்பதித்த ஆபரணச்சேர்க்கையைத்தரும். புதிய வாகன பிராப்தி ஏற்படும். புத்திரனுக்குத் தூரதேசப் பயணத்தை

ஏற்படுத்தும். வழக்கு விவகாரங்களில் ஜெயமுண்டாகும். தாம்பத்திய வாழ்வில் அன்யோன்யம் நிலவும். செய்தொழில் அலுவல்கள் வெற்றி கரமாகச் செயல்பட்டுவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

ஷ ஆதாயம் 5. விரயம் 2, ஆரோக்கியம் 0, அனாரோக்கியம் 2, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

**12. மீனம் :– பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.**

( தி. து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவரவுகள் செலவுகள் சரிசமனாக இருந்துவரும். சகோதரிக்கு 10உ க்குமேல் சுப விசேஷம் நடக்கும். வீடு வசதியில் பசுபால் பிராப்தியில் மாதயின்பகுதியில் நற்பலன் தரும். புத்திரனுக்கு ஓர் விபத்துவந்து தப்பும். மனைவிக்கு இரத்தாதிக்க நலிவு ஏற்பட்டுக் குணமாகும். செய்தொழிலில் பெருமதிப்பை ஏற்படுத்தும். புதன் வியழன் சுபமாகும்.

ஷ ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அனாரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

---

# அன்னை அருள்மாலை

திருமுறை இன்னிசைவாணர்

**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

தேடிவரும்மாந்துறை அழகாலுயர்ந்தம்மை
சிவனுறையும் திருப்பாற்றுறை
சிந்திப்பதற்கரிய மேகலாம்பிகையம்மை
செம்மையுறு திருவானைக்கா
கூடிமகிழகிலாண்ட நாயகிபைஞ்ஞீலியே
கொண்டிடும் விசாலாட்சியே
கோதிலாத்திருப்பாச்சி லாச்சிராமத்திலே
குணமுறு பாலசுந்தரி
ஈடிலாஈங்கோய் மலைமரகதவல்லி
எழிலாரும் வாட்போக்கியில்
எல்லோர்க்கும்நல்வாழ்வு தருசுரும்பார்குழலி
இறைவனுறை கடம்பந்துறை
பாடிமகிழ்வார்க்கருளும் முற்றிலாமுலையம்மை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல்லடியிணையைத் தஞ்சம்அடைந்தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (7)



உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

**ஸ்ரீஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில்**

# பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவ லிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப் பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது **தருமபுரம்.** இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகர் அருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருவதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து ஜீவசமாதி கூடிய கோயிலே **ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்.** இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ **ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு** நிகழும் **காளயுக்தி ஆண்டு வைகாசித்திங்கள் 4 - ஆம் நாள் ( 18—5—78 ) வியாழக்கிழமை** தொடங்கிப் பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் **திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும்** நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

தருமையாதீன
மடாலயம்,
காளயுக்தி - வைகாசி

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
கார்பார்
**சொக்கநாதத் தம்பிரான்.**

# ஸ்ரீ ஆதிபரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவ வேளாள மரபில் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோம வார சுபதினத்தில் தோன்றினார். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினார். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் **"உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே"** என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந் தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ் வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தை யுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த் தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினார். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்று வந்த நாம், பூஜைப்பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திசையில் இருக்கின்றோம்; மூழ்கிப் பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று "பெருமானே! கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூசிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினார். அன்று இரவு பெருமான் கனவில்தோன்றி, **"திருவாரூர் ஞானப் பிரகாசனிடம் ஞானோபதேசமும் சிவபூஜையும் பெறுக"** என்று பணித்தருளி ஞானப்பிரகாசரது கனவிலும்சென்று, "உன்னிடம்

வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோப தேசம் செய்து சிவபூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக'' என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுளின் திரு முன்பு சீடரின் வருகையை ஞானப்பிரகாசர் எதிர்நோக்கி யிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர் வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் பெற்றார். பின்பு அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒரு நாள், ஞானப் பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன், அங்கு இல்லாமைகண்டு, ஞான சம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் இல்லம் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது 'நிற்க' என்று சொல்லி உள்ளேசென்றார். குருவாணையைக் கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது. ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பால் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார். குருமூர்த்தியும் கேட்டு வந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்துச் சமய பரிபாலனம் புரிக' என்றருளினர். சீடர்,

**"களக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?**
**எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங்கார் புரத்தைச்**
**சினக்கும் கமலையுன் ஞானப்பிர காச சிதம்பர இன்று**
**உனக்கிச்சை எப்படி ? அப்படியாக உரைத்தருளே''**

என்று வேண்டினர். அதுகேட்டுக் குருமூர்த்திகள் "தருமபுரம் செல்க'' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர், அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதிபரமாசாரிய மூர்த்திகள்.

# திருநாள் விபரம்

வைகாசி மீ

| தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | கிழமை | திரு நாள் | விபரம் |
|---|---|---|---|---|
| 3 | 17—5—78 | புதன் | | காலை கணபதி ஹோமம். இரவு உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மணி 7-க்குமேல் 8-க்குள் விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம். |
| 4 | 18—5—78 | வியாழன் | 1 | உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலைமணி 9-க்கு மேல் 9-45 க்குள் மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுறைய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மஹாத்துவஜா ரோகணம். |
| 5 | 19—5—78 | வெள்ளி | 2 | கற்பக விருக்ஷக் காட்சி |
| 6 | 20—5—78 | சனி | 3 | பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி. |
| 7 | 21—5—78 | ஞாயிறு | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி, |

காளயுக்தி௵ வைகாசி௴

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 22—5—78 | திங்கள் | | சகோபுர ரிஷபவாகனக் காட்சி. |
| 9 | 23—5—78 | செவ்வாய் | 6 | யானை, அன்னம் ஆட்டுக்கிடா வாகனக் காட்சி. |
| 10 | 24—5—78 | புதன் | 7 | இரவு மணி 8-15 க்குமேல் 9க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம். புஷ்ப விமானம். வெள்ளி ரதக் காட்சி. |
| 11 | 25—5—78 | வியாழன் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| 12 | 26—5—78 | வெள்ளி | 9 | காலை மணி 8-க்குமேல் 9-க்குள் மிதுன லக்னத்தில் மஹா ரதாரோகணம். **திருத்தேர்** வடம் பிடித்தல். |
| 13 | 27—5—78 | சனி | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்ச மூர்த்திகளும் ரிஷபாருடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம். |
| 14 | 28—5—78 | ஞாயிறு | | மௌன உற்சவம். |
| 15 | 29—5—78 | திங்கள் | | ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம். |
| 16 | 30—5—78 | செவ்வாய் | | காலை உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம். மாலை மணி 5-க்குமேல் 6-க்குள் விருச்சிக லக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம். |

உ

குருபாதம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

## முதல் திருநாள்

18—5—78 வியாழக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## திருக்கோயில் திருநாள்

### கருத்தரங்கம்

வரவேற்புரை :

வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
வேளூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

தொடக்கவுரை :

முத்தமிழ்க்காவலர், கலைமாமணி,
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்,
திருச்சிராப்பள்ளி.

விரிவுரைகள் :

பேராசிரியர் திரு. சோ. அரியநாயகம் எம்.ஏ.,
கோயமுத்தூர்.
— 'சொற்கோயில்'

பேராசிரியர் திரு. சோ. சத்தியசீலன் எம். ஏ.,
திருச்சிராப்பள்ளி.
— 'மனக்கோயில்'

பேராசிரியர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ.,
திருச்சிராப்பள்ளி.
— 'கற்கோயில்'

இரவு 9-00 மணி

## திரைப்படக் காட்சி

## இரண்டாம் திருநாள்

19—5—78 வெள்ளிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

### சேரடியார் திருநாள்

## பட்டிமண்டபம்

வரவேற்புரை :

வித்துவான். ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
திருநள்ளாறு தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

நடுவர் :

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
( தவத்திரு. குன்றக்குடி அடிகளார் )

பொருள் :

பகைவனுக்கு அருளும் பாங்கில் நம்நெஞ்சில் நிறைபவர்
ஏனாதிநாத நாயனாரா ? மெய்ப்பொருள் நாயனாரா ?

ஏனாதிநாதரே ! மெய்ப்பொருளாரே !

இலஞ்சி, புலவர்,
திரு. அ. இ. முத்துக்குமாரசாமி
திருச்சி.

பேராசிரியர்
திரு அ. கலியபெருமாள் எம். ஏ.
மாயூரம்.

புலவர். திருமதி, சு. பத்மா
மாயூரம்.

செல்வி கா. வள்ளிமயில்
மாயூரம்.

புலவர்
திரு. கா. ம. கணபதிப்பன்
தருமபுரம்.

பேராசிரியர்
திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ.,
தருமபுரம்.

இரவு 9-00 மணி

## கலை நிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி
மாணவ - மாணவியர்

# மூன்றும் திருநாள்

20—5—78 சனிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## சமுதாயத் திருநாள்

## சிந்தனை மேடை

வரவேற்புரை :

**வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

தருமையாதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.

நடுவர் :

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி

**திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார்**, பி. ஏ., பி. எல்.,

சென்னை.

பொருள் :

**மனித மனமாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அரண் செய்வது சட்டமா ? சமயமா ?**

பங்கேற்போர் :

செந்தமிழ்ப் புரவலர்

**திரு. இரா. இராஜசேகரன்**, பி. எஸ்சி., பி. எல்.,

பூம்புகார்.

பேராசிரியர் **திரு. இரா. செல்வக்கணபதி**, எம். ஏ.,

தருமபுரம்.

**திரு. ஆர். சிவபுண்ணியம்**, பி. ஏ. பி. எல்.,

மாயூரம்.

பேராசிரியர் **திரு. ஆ. மங்கலம் உடையார்**, எம். எஸ்சி.,

சிதம்பரம்.

பேராசிரியை **வித்துவான். திருமதி. ப. நீலா**, எம். ஏ.,

தருமபுரம்.

இரவு 9-00 மணி

## திரைப்படக் காட்சி

## நான்காம் திருநாள்

21—5—78 ஞாயிற்றுக்கிழமை ] [ மாலை 6-30 மணி

### காப்பியத் திருநாள்

## வழக்காடு மன்றம்

வரவேற்புரை :

**ஸ்ரீமத் பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள்**
சீகாழி தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

நடுவர் :

**திருக்குறளார். திரு. வீ. முனிசாமி பி. ஏ., பி. எல்.,**
விழுப்புரம்.

பொருள் :

**அப்பரடிகளைத் தண்டிக்கத் துணிந்த**
**பல்லவவேந்தன் குற்றவாளி !**

வழக்குத் தொடுப்பவர் :
புலவர்,
திரு. இரா. சண்முகவடிவேலு
பி. லிட்.
திருவாரூர்.

எதிர்வழக்காடுபவர் :
புலவர்,
திரு. சோம. இளவரசு
பி. ஏ.,
சிதம்பரம்.

இரவு 9-00 மணி

### கலை நிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி
மாணவ - மாணவியர்

---

## ஐந்தாம் திருநாள்

22—5—78 திங்கட்கிழமை ] [ மாலை 6-30 மணி

### புராணத் திருநாள்

## பட்டி மண்டபம்

வரவேற்புரை :

**ஸ்ரீமத். சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
திருக்குவளை தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

நடுவர் :

செந்தமிழ் வித்தகர்

திரு. அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ.,

சென்னை.

பொருள் :

**பெரியபுராணச் சீரடியார் வரலாறுகள் பெரிதும் விளக்குவது பக்தி வைராக்கியமா ? கடமை வைராக்கியமா ?**

பக்தி வைராக்கியமே !

பேராசிரியர்
திரு. தெ. ஞானசுந்தரம், எம்.ஏ.
சென்னை.

புலவர்
திருமதி. துரை. வள்ளி, எம்.ஏ.
மாயூரம்.

வித்துவான்
திரு. ஆ. இராமபத்திரன், எம்.ஏ.
மாயூரம்.

கடமை வைராக்கியமே !

பேராசிரியர்
திரு. இரா. செல்வக்கணபதி, எம்.ஏ.
தருமபுரம்.

புலவர்
செல்வி. இராதா. ஜெயலட்சுமி,
மாயூரம்.

பேராசிரியர்
திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ.
தருமபுரம்.

இரவு 9-00 மணி

## திரைப்படக் காட்சி

---

## ஆறும் திருநாள்

23—5—78 செவ்வாய்க்கிழமை ] [ மாலை 6-30 மணி

## திருவிளையாடல் திருநாள்

## வழக்காடு மன்றம்

வரவேற்புரை :

**ஸ்ரீமத். கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்**

குறுக்கை தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

நடுவர் :

பேராசிரியர், பெரும்புலவர்,

திரு. பா. நமசிவாயம் எம். ஏ.,

திருப்புத்தூர்.

பொருள் :

**இறையனார் பாடலில் பிழைகண்ட நக்கீரர் குற்றவாளி!**

வழக்குத்தொடுப்பவர் :
பேராசிரியர்,
**திரு. இரா. செல்வக்கணபதி**
தருமபுரம்.

எதிர்வழக்காடுபவர் :
புலவர்,
**திரு. கோ. சாரங்கபாணி**
காரைக்கால்.

இரவு 9-00 மணி

**கலை நிகழ்ச்சி**

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி
மாணவ - மாணவியர்.

---

## ஏழாம் திருநாள்

24—5—78 புதன்கிழமை ]                [ மாலை 6-30 மணி

## ஸ்ரீ ஞானம்பிகை உடனாகிய ஸ்ரீஞானபுரீசுவர சுவாமி திருக்கல்யாணத் திருநாள்

வரவேற்புரை :

**ஸ்ரீமத். குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்**
மாயூரம் குமரக்கட்டளை தேவஸ்தானம், கட்டளைவிசாரணை.

சிறப்புரை :

**கேப்டன். திரு. V. சுப்பராமன்**
இயக்குநர்,
தேசிய சமூக நல சேவை, சென்னைப் பல்கலைக்கழகம்,

விரிவுரைகள் :

தருமை ஆதீனப் புலவர்
**திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ.,**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

— "பார்வதி திருமணம்"

திரு. எஸ். சுந்தரேசஞ் செட்டியார் பி. ஏ., எல். டி.,
குடந்தை.
— "மீனாட்சி திருமணம்"

இரவு 9-00 மணி

## பொம்மை நாடகம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபை, மாயூரம்.
"வள்ளித் திருமணம்"

---

## எட்டாம் திருநாள்

25—5—78 வியாழக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## கவிதைத் திருநாள்

## கவியரங்கம்

வரவேற்புரை :

வித்துவான். திருமதி. ப. நீலா, எம். ஏ.,
தருமபுரம்.

தலைவர் :

செந்தமிழ்ச்செல்வர்,
திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,
ஆசிரியர் 'கலைமகள்', சென்னை.

பொருள் :

"இன்று இவர்கள் சந்தித்தால்......"

பங்கேற்போர் :

திரு. அரு. நாகப்பன்
காரைக்குடி.
— 'கம்பரும் இராமரும்'

தருமையாதீனப்புலவர்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி.,
— 'நாவரசரும் அப்பூதியும்'

வித்துவான். திரு. ம. வே. பசுபதி
திருப்பனந்தாள்.
— 'சேக்கிழாரும் சம்பந்தரும்'

**கவிஞர். திரு. முகிலன்**
கும்பகோணம்.
— 'இளங்கோவும் கோவலனும்'

**திரு. ச. சவகர்லால்** எம். ஏ., பி. டி.,
திருப்புத்தூர்.
— 'பாரதியும் பாஞ்சாலியும்'

இரவு 9-00 மணி

**திரைப்படக் காட்சி**

---

## ஒன்பதாம் திருநாள்

26—5—78 வெள்ளிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

***சாத்திரத் திருநாள்***

## வினாவிடை அரங்கு

வரவேற்புரை :

**புலவர். திரு. இரா. செல்வக்கணபதி**, எம். ஏ.

தொடக்க உரை :

செந்தமிழ்க் கவிதைச் செம்மல், கவிதாமணி
**திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்**
திருச்சிராப்பள்ளி.

விடை இறுப்போர்:

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்
**திரு. சி. அருணை வடிவேல் முதலியார்,**
காஞ்சிபுரம்.

பொருள் :

**" இலக்கியம் — சமயம் — சாத்திரம் "**

வினாத் தொடுப்போர் :

பேராசிரியர் **திரு. தி. வ. காந்திமதிநாதன்**, பி. ஏ., ஆனர்சு.
மாயூரம்.

தருமையாதீனப் புலவர்
**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்**, எம். ஏ.

**செல்வி. சி. பார்வதி**, எம். ஏ.
மாயூரம்.

சமயப் பயிற்சியாளர்கள்

இரவு 9-00 மணி

## கலை நிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி,
மாணவ மாணவியர்.

---

## பத்தாம் திருநாள்

27—5—78 சனிக்கிழமை ] [ காலை 8-00 மணி

## குருபூஜைத் திருநாள்

வரவேற்புரை :

தருமையாதீனப் புலவர்
**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,**
தருமபுரம்.

சிறப்புரை :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
**ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்**

விரிவுரைகள்:

**கருமுத்து. திரு. எஸ். சொக்கலிங்கம் செட்டியார்,**
சிவகாமி மில் அதிபர், மதுரை.
— 'கடம்பவன புராணச் சிறப்பு'

தருமையாதீனப் புலவர்
**மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர்,**
மதுரை.
— 'கடம்பவன புராணச் செய்யுள்நலம்'

காலை 8-00 மணி அளவில்

## சொக்கநாதப் பெருமான் வழிபாடு

குருபூஜை விழா மலர் :— "கடம்பவன புராணம்"

காலை 11-00 மணி அளவில்

## ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

( ஆதீனஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயில் )

மாலை 5-00 மணி முதல்

வரவேற்புரை :

**வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ.,**

சிறப்புரை :

**திரு. இராம. ஏகப்பன்**

தலைவர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றம், கோயமுத்தூர்.

விரிவுரைகள் :

**திரு. எம். பாலசுப்பிரமணியன்,**

அமைப்பாளர்,

ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணிமன்றம், கோயமுத்தூர்.

— 'குருவழிபாடு'

**வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர்**

— 'இலிங்க வழிபாடு'

தருமையாதீனப்புலவர்,

**வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன்**

— 'சங்கம வழிபாடு'

மாலை 6-00 மணி அளவில்

**தருமையாதீனம் குருமகாசந்நிதானம்**

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**காவிரித் திருமஞ்சனத்திற்கும், குருமூர்த்த வழிபாட்டிற்கும் எழுந்தருளல்.**

இரவு 9-00 மணி அளவில்

## ஆடலும் பாடலும்

**வித்துவான். திரு. வா. ச. சுந்தரேசம் பிள்ளை, சிதம்பரம்.**

---

**28—5—78 ஞாயிற்றுக்கிழமை ] [ காலை 8-00 மணி**

## பட்டணப் பிரவேசத் திருநாள்

வரவேற்புரை :

தருமையாதீனப் புலவர்

**வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன்**

சிறப்புரை :

**திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி.ஏ., பி.எல்.,**

**முன்னாள் அறநிலையத்துறை ஆணையர், சென்னை.**

விரிவுரைகள் :

பைந்தமிழ்ச் செல்வர்

திரு. ச. சிவகுமாரன் எம். ஏ., சென்னை.

— 'சொக்கநாதக் கலித்துறை'

வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் திருவாரூர்.

— 'சிவபோகசாரம்'

வித்துவான். திரு. மு. சுந்தரராசன் திருவாரூர்.

— 'சொக்கநாதவெண்பா'

வித்துவான். திரு. நா. குருசாமி மதுரை.

— 'ஞானப்பிரகாசமாலை'

காலை 10-00 மணி அளவில்

## ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல் 1-00 மணி

## மாகேசுவரபூஜை

மாலை 6-00 மணி

## சமயப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா

பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

வரவேற்புரை :

வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் தருமபுரம்.

சிறப்புரை :

அறப்பணிச்செல்வர்,

டாக்டர். திரு. K. அரங்கசாமிப்பிள்ளை எம். பி., பி. எஸ்., சிதம்பரம்.

இரவு 7 மணி முதல்

## இன்னிசை

இசைமணி, தருமையாதீன இசைப்புலவர்,

சீகாழி. திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினர்.

இரவு 10 மணி முதல்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## பட்டணப்பிரவேசம்